Vol.38 Issue No.18 2025 ஜீன் 18-20 ரூ.30

உண்மை துணிவு உறுதி

# நக்கீரன்

NAKKHEERAN

‘நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே’ நெ.1 புலனாய்வு வாரமிருமுறை இதழ்

## கடத்தல் துரத்தல்! தப்பி ஓடிய எம்.எல்.ஏ!



## கட்சி பஞ்சாயத்து!

## தோழமை மிரட்டல்!

## சமாளிப்பாரா ஸ்டாலின்?

## அப்பா - மகன் சண்டை!

## பா.ம.க. நிஜ நிலவரம்!

## கட்சி பஞ்சாயத்து! தோழமை மிரட்டல்!

# சமாளிப்பாரா ஸ்டாலின்?

சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே இருக்கும் நிலையில், தேர்தல் பணிகளை விரைவுப்படுத்தி வருகிறார் முதல்வர் ஸ்டாலின். இந்த நிலையில், மாவட்டங்களில் தீர்க்க முடியாத பிரச்சினைகள் அறிவாலயத்தில் பஞ்சாயத்தாக நடப்பதும், அதிக சீட்டுகளுக்காக கூட்டணிக் கட்சிகள் நெருக்கத் துவங்கியிருப்பதுமான நெருக்கடிகள் தி.மு.க. தலைமையை மிரட்டிக் கொண்டிருக்கின்றன. இவைகளை முதல்வர் ஸ்டாலின் எப்படி சமாளிக்கப் போகிறார்? என்கிற கேள்வி தி.மு.க. அமைச்சர்களிடம் எதிரொலித்தபடி இருக்கிறது.

‘வெல்வோம் 200; படைப்போம் வரலாறு’ எனும் தாரக மந்திரத்தை உயர்த்தி பிடித்து இலக்கை நோக்கிப் பாய்ச்சல் காட்டி வரும் தி.மு.க., தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்து கடந்த 1 வருடத்துக்கு முன்பிலிருந்தே 200 இடங்களை வெல்வதற்கான பணிகளைத் துவக்கிவிட்டது.



ஒருங்கிணைப்பின் யோசனையின் பேரில் மாவட்டங்களுக்கு பொறுப்பு அமைச்சர்களும், அதனைத் தொடர்ந்து, தி.மு.க.வின் அமைப்பு ரீதியிலான மாவட்டங்கள் மற்றும் ஒன்றியங்கள் பிரிக்கப்பட்டு அதற்குப் புதிய நிர்வாகிகளும் நியமிக்கப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகள் மட்டும் போதாது என தமிழ்நாட்டை எட்டு மண்டலங்களாகப் பிரித்து, 8 பேரை மண்டலப் பொறுப்பாளர்களாக நியமித்தார் ஸ்டாலின். மண்டலப் பொறுப்பாளர்களும், முதற்கட்ட ஆலோசனைக் கூட்டங்களையும் ஆய்வுக் கூட்டங்களையும் நடத்தி முடித்திருக்கிறார்கள். ஆனால், இந்த ஆய்வுக்கூட்டங்களில் பல்வேறு பிரச்சனைகள் வெடித்து, அறிவாலயத்தில் புகார்களாக குவிகின்றன.

இதுகுறித்து நாம் விசாரித்தபோது, “மண்டல பொறுப்பாளர்கள் நடத்தும் ஆய்வுக் கூட்டங்களில் ஏகப்பட்ட பிரச்சினைகள் வெடிக்கின்றன. அதனை மண்டல பொறுப்பாளர்களாக இருக்கும் அமைச்சர்கள் சமாளித்து வருகிறார்கள். ஆய்வுக் கூட்டங்களில் சமாளிக்க முடியாத பிரச்சனைகள், அறிவாலயத்துக்குப் போகிறது. அங்கு பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்படுகின்றன.

www.nakkheeran.in

## இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி நெல்லை சு.முத்து காலமானார்



திருமாவளவன் செல்வப்பெருந்தகை சண்முகம் துரை வைகோ

கடந்த வாரம் வேலூர் மாவட்ட பஞ்சாயத்து ஒன்று... அமைச்சர் எ.வ. வேலு, தாயகம் கவி, ஆஸ்டின் முன்னிலையில் அறிவாலயத்தில் நடந்தது. வேலூர் மாவட்ட தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கார்த்திகேயன், நந்தகுமார் மற்றும் எம்.பி. கதிர்ஆனந்த், ஒன்றிய செயலாளர் கள், நிர்வாகிகள் இதில் இருந்தனர். அவர்களிடம் விசாரணை நடந்தது.

அப்போது, காண்ட்ராக்டர்களிடமிருந்து வசூலிக்கும் கமிஷன் தொகையை, வார்டு உறுப்பினர்களுக்கு ஏன் பிரித்துக் கொடுப்பதில்லை? இதுபற்றி நிறைய புகார்கள் வருகின்றன. 18 ஆம் தேதிக்குள் சேரவேண்டியவர்களுக்கு சேர வேண்டும் என எம்.எல்.ஏ. கார்த்திகேயனுக்கு உத்தரவிடப் பட்டது. ஆனால், கார்த்திகேயனோ, '18-ந்தேதி என்னால் தரமுடியாது. மருத்துவமனை கட்டப்பட்டதில் வரவேண்டிய தொகை வரவில்லை; வந்ததும் மொத்தமாக கொடுக்கிறேன்'னு சொல்லியிருக்கிறார்.

அந்த சமயத்தில், 'கதிர்ஆனந்த் 24 சதவீதம் கமிசன் வாங்குகிறார்; பிரித்துத் தருவதில்லை. இப்படியிருந்தால் தேர்தல் வேலைகளை எப்படி கட்சிக்காரர்கள் சீரியசாக எடுத்துக்கொள்வார்கள்'னு, எம்.எல்.ஏ. நந்தகுமார் குற்றம்சாட்ட, அவரை ஒருமையில் விமர்சித்ததுடன், 'நீ அடிச்ச கமிசன் தொகையில் யார், யாருக்கு பிரித்துக் கொடுத்தே? பட்டியல் போடு! யாருக்குமே நீ கொடுக்கலை. ஆனா, கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான நிலங்கள், சொத்துக்கள், காம்ப்ளக்ஸ்கள் என நீ வாங்கிக் குவித்ததை நான் சொல்லட்டுமா?' என டென்சனானார் கதிர்ஆனந்த். உடனே நந்தகுமாரும் மல்லுக்கட்ட... விசாரணை ரசாபாசமானது.

வேலு உள்ளிட்டவர்கள் அவரை சமாதானப்படுத்தியும் அடங்காத நந்தகுமார், காட்பாடியையும் (துரைமுருகனின் தொகுதி) என்னிடம் கொடுங்க; நான் பார்த்துகிறேன் எனச் சொன்னதும், மேலும் கோபப்பட்டார் கதிர் ஆனந்த். அவருக்கு ஆதரவாக, காட்பாடி ஒன்றியத்தின் இரண்டு செயலாளர்கள் களமிறங்க, மற்ற நிர்வாகிகள் நந்தகுமாருக்கு ஆதரவாகப் பேச... பிரச்சினை பூதாகரமானது.

அதேசமயம், வேலூர் மேயர் சுஜாதாவிற்கு, 'வேலூர் தொகுதியை இந்த முறை உங்களுக்கு வாங்கித் தருகிறேன்' என ஏற்கனவே நந்தகுமார் வாக்குறுதி தந்திருப்பதால் நந்தகுமாருக்கு ஆதரவாக குரல் கொடுத்தார் சுஜாதா. அவரிடமும் கதிர்ஆனந்த் கோபமாக வெடித்தார். அமைச்சர் வேலு, கூச்சல் குழப்பத்தை கட்டுப்படுத்தி, பிரித்துக் கொடுக்கப்பட வேண்டியதை விரைவில் கொடுக்கவேண்டும் என கட்டளையிட்டுவிட்டு, பஞ்சாயத்தை முடித்து வைத்தார்.

வேலூர் விவகாரம் இப்படியிருக்க... செங்கல்பட்டு தொகுதி குறித்த ஆய்வுக் கூட்டம் சமீபத்தில் மண்டல பொறுப்பாளர் ஆ.ராசா தலைமையிலும், அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையிலும் நடந்தது. தொகுதிக்குள் சம்பந்தப்பட்ட ஊராட்சி தலைவர்களின் செயல்பாடுகள் குறித்து தி.மு.க.வினர் குற்றம்சாட்டினர். குறிப்பாக, அஞ்சூர் ராஜேந்திரன், அவர் சார்ந்த ஊராட்சி தலைவரான அ.தி.மு.க. தேவராஜ் நிறைய முறைகேடுகள் செய்வதாகவும், அதனை மாவட்டம் தட்டிக்கேட்க மறுக்கிறார் என்றும் குற்றம்சாட்ட, 'உன்னால் அங்கு ஜெயிக்க முடியலை; இப்போ நீ பேச வந்துட்டே' என்று ராஜேந்திரனை பேச விடாமல் தடுத்து விட்டார் தா.மோ.அன்பரசன்.

அதேபோல காஞ்சி வடக்கு மாவட்டத்தில் தி.மு.க. மா.செ., எம்.எல்.ஏ.க்கள், ஒ.செ.க்களுக்கு எதிராக மாவட்ட நிர்வாகிகளிடம் பிரச்சினைகள் வெடித்தபடி இருக்கிறது. இதுகுறித்த புகார்களையும் ஆ.ராசா கண்டுகொள்ளாததால், அறிவாலயத்தில் புகார்கள் குவிகின்றன.

அறிவாலயத்தில் குவியும் இந்த புகார்கள் மீது கட்சித் தலைமை ஆராய்ந்து தீர்வு காண வேண்டும். இல்லையெனில், தேர்தல் நேரத்தில் களத்தில் நிற்கும் அடிமட்ட நிர்வாகிகளின் அதிருப்திகள் தி.மு.க.வுக்கு எதிராகப் போக வாய்ப்பிருக்கிறது என உளவுத்துறை நோட் போட்டிருக்கிறது. இதனையடுத்தே மண்டலப் பொறுப்பாளர்களை அழைத்து ஆலோசித்தார் முதல்வர் ஸ்டாலின் என்று சுட்டிக்

www.nakkheeran.in



கட்சியினருடன் ஸ்டாலின் ஆலோசனை

காட்டுகிறார்கள் தி.மு.க.வின் மேலிடத் தொடர்பாளர்கள்.

இந்த நிலையில்தான், மதுரையில் நடந்த பொதுக்குழுவில் அறிவித்தபடி நிர்வாகிகள் ஒன் டு ஒன் சந்திப்பை, ‘உடன்பிறப்பே வா’ எனும் தலைப்பில் நடத்திவருகிறார் ஸ்டாலின். மேலும், துணை முதல்வர் உதயநிதி உட்பட 8 மண்டல பொறுப்பாளர்களுடன் இது குறித்து கடந்த 14-ந்தேதி விரிவான ஆலோசனை நடத்தினார் முதல்வர் ஸ்டாலின். அதில், ஆய்வுக்கூட்டத்தில் நடந்த சம்பவங்கள், குற்றச்சாட்டுகள், பிரச்சனைகள் அனைத்தும் விவரிக்கப்பட்டுள்ளன. அது குறித்து பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கிறார் ஸ்டாலின். இப்படிப்பட்ட சூழலில், அதிக சீட்டுகளைக் கேட்டு கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் நெருக்கடி கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். தி.மு.க.வின் வெற்றிக்கு காரணியாக இருப்பதில் கூட்டணி பலம் முக்கியமாக இருக்கிறது. இதனை உணர்ந்துள்ள கூட்டணிக் கட்சிகள், இந்த முறை அதிக சீட்டுகளை கைப்பற்றியாக வேண்டும் எனத் தீர்மானித்துள்ளன.

காங்கிரஸ் கட்சியில் மேலிட பொறுப்பாளர்களின் தலைமையில் அடிக்கடி தேர்தல் தொடர்பான ஆலோசனைக்கூட்டங்களை நடத்திவருகிறார் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை. அந்த கூட்டங்களில், கலைஞர் காலத்தில் நாம் பெற்றதைப் போல அதிக இடங்களை தி.மு.க.விடம் இந்தமுறை பெறவேண்டும். கூட்டணி பலத்தில்தான் தி.மு.க.வின் வெற்றி அடங்கியுள்ளது. ஒரு வேளை 2021 தேர்தலில் ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையையே தி.மு.க. ஒதுக்கினால் ஒப்புக்கொள்ளக் கூடாது. மாற்றுக் கூட்டணியை பற்றி நாம் ஆலோசிக்க வேண்டும் என பகிரங்கமாகவே பேசுகின்றனர். இதனையடுத்து கூடுதல் சீட்டுகள் கேட்பது எங்களின் உரிமை என செல்வப்பெருந்தகையும் பொதுவெளியில் பேசிவருகிறார்.

அதேபோல, ஒவ்வொரு தேர்தலிலும் அதிக இடங்களைக் கேட்பதும், அதனை பெறுவதற்கான முயற்சிகளை எடுப்பதும் கூட்டணிக் கட்சிகளுக்கு வழக்கமானதுதான்; வாடிக்கையானதுதான். இவைகளை கருத்தில் கொண்டு திமுகவிடம் பேசுவோம் என்கிறார் வி.சி.க. தலைவர் திருமாவளவன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம், “கடந்த தேர்தலில் அ.தி.மு.க. -பா.ஜ.க. கூட்டணி ஜெயித்துவிடக் கூடாது என்பதால் தி.மு.க. ஒதுக்கிய குறைவான சீட்டுகளை ஏற்றுக்கொண்டோம். 6 சீட்டுகள் ஒதுக்கியதில் எங்களுக்கு மகிழ்ச்சி இல்லை. அத்தகைய சூழல் இந்த முறை தொடரக்கூடாது. அதனால் தி.மு.க. கூட்டணியில் அதிக இடங்களை கேட்போம். இதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. கூட்டணி இல்லாமல் தமிழகத்தில் எந்த கட்சியும் வெற்றிபெற முடியாது. கூட்டணி மாறும் சூழலை தி.மு.க. உருவாக்காது என நினைக்கிறோம்” என்று பேசியுள்ளார்.

அதேபோல, அண்மையில் செய்தியாளர்களை சந்தித்த ம.தி.மு.க.வின் முதன்மைச் செயலாளர் துரை வைகோ, “வைகோவுக்கு மீண்டும் ராஜ்யசபா சீட்டை தி.மு.க. ஒதுக்கவில்லை. இதனால் சட்டமன்றத் தேர்தலில் அதிக சீட்டுகளை கேட்போம். அது கிடைக்காது போனால் அன்றைய சூழல்களுக்கேற்ப உயர்மட்ட குழுவில் விவாதிப்போம்” என்று சொல்லியிருக்கிறார்.

தி.மு.க. கூட்டணியின் பிரதான கட்சிகள் தி.மு.க.வை மிரட்டிப் பார்ப்பதாகவும் நெருக்கடி கொடுப்பதாகவும் தி.மு.க.விடம் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. அ.தி.மு.க. மற்றும் த.வெ.க. (விஜய்) கட்சிகளின் தலைமைகள், தி.மு.க. கூட்டணி கட்சிகள் எங்களை நோக்கி வரும் என்று சொல்லிவருவதும், மாற்றுக் கூட்டணி அமைக்க வாய்ப்புகள் இருப்பதையும் வைத்து தி.மு.க.வை கூட்டணிக் கட்சிகள் மிரட்டிப் பார்க்கின்றன. இதனை தலைவர் (ஸ்டாலின்) எப்படி சமாளிக்கப் போகிறாரோ? என்கிறார்கள் தி.மு.க. மா.செ.க்கள்.

மாவட்டங்களில் தி.மு.க.வில் நடக்கும் மோதல்கள், கூட்டணிக் கட்சிகளின் நெருக்கடிகள் ஆகியவை முதல்வர் ஸ்டாலினின் 200 இடங்கள் இலக்குக்கு சவாலாக மாறியிருக்கிறது. இதனை சமாளிப்பதில்தான் ஸ்டாலினின் 50 ஆண்டுகால அரசியல் அனுபவம் இருக்கிறது.

**-இரா.இளையசெல்வன்**

www.nakkheeran.in



செங்கல்பட்டில் மாணவியிடம் பாலியல் சீண்டல்: வாலிபருக்கு போலீஸ் வலைவீச்சு


Magil Desings
70103 77039
சிவகங்கை சீமைக்கு வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு
துணை முதலமைச்சர்
அவர்களே வருக ! வருக !!
அன்புடன்...
AL.KR.மணிகண்டன் செட்டியார்
தலைவர் - கண்டரமாணிக்கம் வளர்ச்சிக்குழு



நெதன்யாகுவுடன் கவுதம் அதானி

# இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல்! புதட்டத்தில் அதானி குழுமம்!

காசாவிலுள்ள ஹமாஸ் அமைப்பினருக்கும் இஸ்ரேலுக்குமான போர் கடந்த 2023ஆம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி முதல் தொடர்ந்து நடந்துவரும் சூழலில், இப்போரினால் காசா பகுதியில் 55 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கானோர் அகதிகளாக்கப்பட்டு, உணவுக்கு கூட வழியில்லாமல் பரிதாபமான சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில், ஹமாஸ் அமைப்பிற்கு ஈரான் நாடு ஆதரவு தெரிவித்து வருகிறது. இந்த ஆதரவு நடவடிக்கையை இஸ்ரேல் மட்டுமல்லாது அமெரிக்காவும் கூர்மையாக கவனிக்கத் தொடங்கியது.

ஏனென்றால், அணு குண்டுகளை தயாரிக்கத் தேவையான செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஈரான் தயாரித்துவருவதாகவும், அடுத்த கட்டமாக, தற்போது அணு ஆயுதத் தயாரிப்பில் ஈரான் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. அதையடுத்து, அணு ஆயுத உற்பத்தியைத் தடுக்கும்வகையில் ஈரானோடு அணு ஆயுதக்கொள்கை தொடர்பான பேச்சுவார்த்தையில் அமெரிக்கா இறங்கியது. இரு நாடுகளுக்கிடையிலான பேச்சுவார்த்தை, இத்தாலியிலுள்ள ரோம் நகரில் நடைபெற்றுவந்தது. ஆனால் அணு ஆயுத உற்பத்தியை நிறுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படாத நிலையில், திடீரென ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி, ஈரானை மட்டுமல்லாது உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

கடந்த ஜூன் 12ஆம் தேதியன்று இரவில், ‘ஆபரேஷன் ரைசிங் லயன்’ என்ற பெயரில் ஈரானில் டெஹ்ரான் மற்றும் நடான்ஸ் நகர்ப்பகுதிகளில் அமைந்துள்ள அணு ஆயுத முகாம் மற்றும் ராணுவ தளவாடங்களை குறி வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. குறிப்பாக, ஈரானின் டமாஸ்கஸில் அமைந்துள்ள ஈரான் தூதரக வளாகத்தினுள் ராணுவ அதிகாரிகளின் உயர்மட்டக் கூட்டம் நடத்தப்பட்டது. இந்த கூட்டம் நடைபெறுவதைக் கணக்கில்கொண்டு அந்த வளாகத்தின் மீது, சர்வதேச விதிமுறைகளை மீறி, இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியது. இஸ்ரேலின் இத்தாக்குதலில், ஈரானின் உயர்மட்ட அதிகாரிகளில்




## இயந்திரக் கோளாறு: அவசர, அவசரமாக சென்னையில் தரையிறங்கிய பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம்

ஒருவரான புரட்சிகர காவல்படையின் மூத்த தளபதி பிரிகேடியர் ஜெனரல் முகமது ரெசா ஜாஹேதி, ஜெனரல் முகமது ஹாடி ஹாஜி ரஹிமி உள்ளிட்ட 7 ராணுவ தளபதிகளும், அணு ஆயுத ஆராய்ச்சியாளர்களும் உட்பட 80 பேர் வரை கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது. அங்கு மட்டுமல்லாது ஈரானின் எண்ணெய் கட்டமைப்புகள், ஈரானின் அணு ஆயுதத் திட்டம் தொடர்பான பகுதிகள் என ஈரானின் தலைநகர் டெஹ்ரானிலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட பகுதிகளில் இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளது.

ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதை தடுக்கும் விதத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்தது. இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கொடுத்த விளக்கத்தில், ‘இஸ்ரேல் தனது உயிர் வாழ்தலுக்காகவும், தனக்குள்ள அச்சுறுத்தலை அகற்றுவதற்காகவும் தவிர்க்கவியலாத சூழலில் இத்தாக்குதலை நடத்துகிறது’ என்று குறிப்பிட்டிருந்தார்.

அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கான யுரேனியம் செறிவூட்டலில் 70% என்ற அளவை ஈரான் எட்டியுள்ளதாகவும், அது 90% என்ற அளவை எட்டிவிட்டால் அணு ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டுவிடும் என்றும், எனவே தற்காப்பு நடவடிக்கையாக இந்தத் தாக்குதல் அவசியமாகிறது என்று இஸ்ரேல் விளக்கமளித்துள்ளது. குறிப்பாக, ஈரான் புதிதாக ஓர் அணு அமைப்பை நிறுவி, மற்றொரு செறிவூட்டல் தளத்தை கட்டத் தொடங்கியிருப்பதாகவும் இஸ்ரேல் குற்றம்சாட்டியது.

இத்தாக்குதலால் கடுங்கோபங்கொண்ட ஈரான், கடந்த வெள்ளிக்கிழமையன்று இஸ்ரேல் மீது அதிரடியாக ஏவுகணைத் தாக்குதலையும் ட்ரோன்கள் மூலமான தாக்குதலையும் நடத்தியது. இத்தாக்குதல், இஸ்ரேலின் எனர்ஜி கட்டமைப்புகள், மக்கள் வாழும் பகுதிகளில் நடத்தப்பட்டதில் பல அடுக்குமாடிக் கட்டடங்கள் தரை மட்டமாகின. பத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.



ஈரான் உயர்தலைவர் அயதுல்லா கமேனி

இதையடுத்து, இஸ்ரேலின் ஜெருசலேம், டெல் அவிவ் பகுதிகளில் சைரன்கள் மூலம் இஸ்ரேலிய மக்களுக்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இஸ்ரேல், இத்தாக்குதலால் நிலை குலைந்தது. உடனே இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவாக வர, ஈரானோ, அமெரிக்கா மட்டுமல்லாது, இஸ்ரேலுக்கு உதவ வரும் இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளுக்கும் எச்சரிக்கை விடுத்தார் ஈரான் உயர்தலைவர் அயதுல்லா கமேனி. மேலும், இஸ்ரேல் -ஈரான் இடைப்பட்ட தாக்குதல் 3ஆவது நாளாக ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்ததில் ஈரானில் சுமார் 406 பேர் வரை கொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

இந்நிலையில், இஸ்ரேலில் அதானி குழுமம் வாங்கியுள்ள, இஸ்ரேலின் இரண்டாவது மிகப்பெரிய துறைமுகமான ஹைஃபா துறைமுகத்தின் மீதும் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட நிலையில், அதனை அதானி குழுமம் மறுத்துள்ளது. இந்த துறைமுகத்தை கடந்து 2023 ஜனவரி மாதத்தில்தான் 1.2 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு அதானி குழுமம் வாங்குவது தொடர்பான ஒப்பந்தத்தில் நெதன்யாகுவும் கவுதம் அதானியும் கையெழுத்திட்டது குறிப்பிடத்தக்கது. இஸ்ரேலின் இறக்குமதியில் 30% இத்துறைமுகத்தின் வழியாகத்தான் செயல்படுத்தப்படுகிறது. எனவே இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதலை அதானி குழுமமும், இந்தியத் தலைமையும் ஒருவிதப் பதட்டத்தோடு பார்த்து வருகிறது. இந்தியா -பாகிஸ்தான் போரை முடிவுக்கு கொண்டுவந்ததைப் போல் இஸ்ரேல் -ஈரான் போரையும் முடிவுக்கு கொண்டுவருவேனென்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறியிருப்பதால், அமெரிக்க மத்யஸ்தம் குறித்த கேள்வி இன்னமும் மோடியைத் தொடர்கிறது!

**-தெ.சு.கவுதமன்**







www.nakkheeran.in

கல்லிடைக்குறிச்சி அருகே திருமணமான 10 மாதங்களில் இளம்பெண் தற்கொலை - உதவி கலெக்டர் விசாரணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையும் மதச்சார்பின்மையும் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமை என்கிற அடிப்படையில் ‘மதச்சார்பின்மையைப் பாதுகாப்போம்’ என்ற முழக்கத்தோடு விடுதலை சிறுத்தைகள் கட்சியினரின் பேரணி திருச்சியில் நடைபெற்றது.

டி.வி.எஸ். டோல்கேட் அருகே தொடங்கிய பேரணி கல்லுக்குழி, தலைமை தபால் நிலையம், ஒத்தக்கடை வழியாகச் சென்று திருச்சி மாநகராட்சி அலுவலகமருகே நிறைவடைந்தது.

# நாங்கள் ஆண்ட பரம்பரையல்ல? அறிவுப் பரம்பரை!



திருச்சி பேரணியில்...

## -சீறிய திருமா!

பேரணிக்கு முன்பாக திருமாவளவன் தலைமையில் மதச்சார்பின்மையைப் பாதுகாக்க வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டது.

இந்தப் பேரணியில் வக்ஃபு திருத்தச் சட்டத்தை திரும்பப் பெறவேண்டும், குடியுரிமை திருத்தச் சட்டத்தை திரும்பப் பெறவேண்டும் என்பது உள்ளிட்ட 12 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதுமிருந்து விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த பல்லாயிரக்கணக் கானோர் நீலநிற ஆடையணிந்து பேரணியில் பங்கேற்றனர். பேரணியின் நிறைவில் நடந்த கூட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் உரையாற்றினார்.

“தமிழ்நாடு அரசியலின் திசைவழியை தீர்மானிப்பவர்கள் விடுதலை சிறுத்தைகள். அகில இந்திய அளவில் மதச்சார்பின்மைக்கு எதிரானவர் கள் Vs மதச்சார்பின்மைக்கு ஆதரவானவர்கள் என்கிற கூர்மைப்படுத்தும் அரசியலை வி.சி.க.தான் செய்துவருகிறது. முதலமைச்சர் பதவி குறித்து கவலைப்படுபவர்கள் அல்ல நாங்கள்.

பூர்வகுடிகள் ஆட்சி அதிகாரத்திற்கு வரவேண்டும் என்பதுதான் அம்பேத்கரின் கனவு. எந்த நேரத்தில் எதைச் செய்யவேண்டும் என்பது எங்களுக்கு தெரியும். அரசியல் களத்தில் சமகாலத்தில் எங்களோடு புறப்பட்டவர்கள் வழிதவறி காணாமல் போய்விட்டார்கள். ஆனால் வி.சி.க. தவிர்க்கமுடியாத அரசியல் கட்சியாக உள்ளது. எங்களுக்கு யாருடைய ஆலோசனை களும் தேவையில்லை.

கட்டட வேலை செய்பவர்கள், ஆடு -மாடு மேய்ப்பவர்கள், ஆட்டோ ஓட்டுனர்கள் என அனைவரும் கோட் அணியவேண்டும் என்பதால்தான் நான் பேரணிக்கு வரும் அனைவரையும் கோட் சூட்டுடன் வர கூறினேன். அம்பேத்கர்போல் நடக்கவேண்டும், அம்பேத்கர் போல் உணரவேண்டும். ஜாதி வெறியைப் பேசுபவர்கள் அல்ல வி.சி.க. நாங்கள் ஆண்ட பரம்பரை அல்ல அறிவுப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்.

அம்பேத்கரை தலைவராக ஏற்றுக்கொண்டவர்கள் வி.சி.கவினர். வி.சி.க.வினர் எப்பக்கமோ அப்பக்கமே வெற்றி. தேர்தலைப் பற்றி கவலைப் படாமல் தேசத்தைப் பற்றி கவலைப்படுபவர்கள் நாம் என்பதற்கு சாட்சிதான் இந்தப் பேரணி” என்றார்.

இந்த கூட்டத்தில் வி.சி.க. மாநில பொதுச் செயலாளர் ரவிக்குமார், சிந்தனைச்செல்வன், வன்னி அரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளூர் ஷாநவாஸ் பனையூர் பாபு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். **-துரை.மகேஷ்**

## பாரம்பரியமிக்க சித்த மருத்துவ சிகிச்சை

# சேலம் சிவராஜ் சித்த வைத்திய சாலை

அண்ணா பூங்கா பின்புறம், தமிழ்ச்சங்கம் ரோடு வழியாக, ராஜாராம் நகர், சேலம் – 7.

: 98427 22500, 98427 13500 ☎ : 0427 - 4265300 E-mail : sales@sivarajsiddha.com

7 தலைமுறைகள், 212 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட எங்கள் வைத்திய சாலையில் தவறான பழக்கவழக்கத்தால் ஏற்பட்ட ஆண்மை குறைவு, நரம்பு தளர்ச்சி, ஹார்மோன் குறைபாடு, உயிரணுக்கள் குறைவு, இல்லறத்தில் பிரச்சினை, குழந்தையின்மை, ஆண்களுக்கான குறைபாடுகள், கருவுற்றல் கோளாறுகள் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கு சித்த மருத்துவம் மூலம் தலைசிறந்த மருத்துவர்களை கொண்டு சிறந்த நிவாரணம் வழங்கப்படுகிறது.

### தினசரி காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை


Dr.சிவராஜ் சிவகுமார்

**சென்னை கிளை**
10/4 வீரபத்திரன் தெரு, வள்ளுவர் கோட்டம் அருகில், VIP கேட்டின் எதிரில், நுங்கம்பாக்கம், சென்னை–34.
M: 97888 27500, 044-28230072

**ஈரோடு கிளை**
பெருந்துறை ரோடு, செந்தில் நரம்பியல் எதிரில், கோவை மெடிக்கல் ரோடு வழியாக, 36, காந்தி நகர், வாட்டர் டேங்க் ரோடு, ஈரோடு.
M: 98427 39500, 0424-2259332

**ஓசூர் கிளை**
M-13, ஆவலப்பள்ளி ஹட்கோ, ஸ்டேட் பேங்க் பின்புறம் அத்வைத் பள்ளி அருகில், பாகலூர் ரோடு, ஓசூர்.
M : 81108 03500

**திருப்பத்தூர் கிளை**
88/3, காந்தி ரோடு, GH எதிரில்
M: 74488 11500


Dr.சிவராஜ் சிபி

### ஒவ்வொரு மாதமும் இதே தேதிகளில் சந்திக்கலாம். (விடுமுறை நாட்களிலும் முகாம் உண்டு)

**திருச்சி**
1ம், 9ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் அபிராமி
சென்ட்ரல் பஸ்நிலையம், பெரியார் சிலை அருகில்.

**திருப்பூர்**
1ம் தேதி காலை 6 முதல் மதியம் 12 வரை
14ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை
SAP ரெஸிடென்ஸி
111, முனிசிபல் ஆபீஸ் ரோடு.

**தஞ்சை**
2ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் காசி இன்
1493, தெற்கலங்கம், பழைய பேருந்து நிலையம்.

**கும்பகோணம்**
2ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் திருமால்
ஜான்செல்வராஜ் நகர், புதிய பஸ்நிலையம் அருகில்.

**நாகர்கோவில்**
2ம் தேதி,
காலை 6 முதல் மாலை 5 வரை,
ஹோட்டல் கங்கா பேலஸ்
K.P. ரோடு, செட்டிகுளம், ஜங்சன்.

**நெல்லை**
3ம், 23ம் தேதியும்,
காலை 6 முதல் மாலை 5 வரை,
பரணி லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு.

**விழுப்புரம்**
3ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஆதித்யா
தேர் விநாயகர் கோவில் & புதிய பஸ்நிலையம் எதிரில், கே.கே.நகர்.

**காஞ்சிபுரம்**
4ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
வசந்த் வில்லா
T.K.நம்பி வீதி, வெங்குடி மருத்துவமனை & பெண்கள் காலேஜ் பஸ் ஸ்டாப் அருகில்.

**மதுரை**
4ம், 22ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
காலேஜ் ஹவுஸ்
டவுன் ஹால் ரோடு.

**கள்ளக்குறிச்சி**
4ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
AKT லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில்.

**தேனி**
7ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் தேனி இண்டர்நேசனல்
பழைய பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு.

**திண்டுக்கல்**
8ம், 24ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஐஸ்வர்யா
ஸ்பென்ஸர் காம்பௌண்ட், பஸ் நிலையம் எதிரில்.

**திருவண்ணாமலை**
9ம், 22ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ராதா லாட்ஜ், 94, சின்ன கடை வீதி.

**வேலூர்**
11ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ரெங்கா லாட்ஜிங் ஹவுஸ்
3, தென்னைமரம் தெரு.

**கடலூர்**
11ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் CAR லாட்ஜ்
62, லாரன்ஸ் ரோடு.

**சிதம்பரம்**
11ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஜெயராம்
35, 36, SP கோயில் தெரு.

**மாயவரம்**
12ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
அல்-முஜம்மில் லாட்ஜ்
பழைய பஸ்நிலையம் அருகில்.

**நாகப்பட்டினம்**
12ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
நியூ குமார் லாட்ஜ்
புதிய பஸ் நிலையம் அருகில்.

**மன்னார்குடி**
13ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் காவேரி லாட்ஜ்
புதிய பஸ் நிலையம் அருகில்.

**புதுக்கோட்டை**
13ம் தேதி, மதியம் 2 முதல் மாலை 5 வரை
26ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ராயல் பார்க்
புதிய பஸ்நிலையம் எதிரில்.

**கோவை**
13ம், 26ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
OYO ROOMS (கோடா ஓட்டல்)
294, ராஜவீதி, ஸ்ரீ லட்சுமி லாட்ஜ் எதிரில்.

**கரூர்**
14ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஆர்த்தி ஹோட்டல்
தின்னப்பா தியேட்டர் & பஸ்நிலையம் அருகில்.

**புதுவை**
16ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஸ்ரீ சப்தகிரி
பஸ் நிலையம் எதிரில்.

**தென்காசி**
18ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
கிருஷ்ணா டூரிஸ்ட் ஹோம்
2, பழைய பஸ் நிலையம் ரோடு.

**கிருஷ்ணகிரி**
20ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஸ்ரீ வெங்கடேஸ்வரா லாட்ஜ்
239, பெங்களூர் ரோடு.

**ஆரணி**
21ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஸ்ரீ சாய் சுவாமி லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில்.

**ராம்நாடு**
24ம் தேதி
காலை 6 முதல் மாலை 5வரை
ஹராஜா பேலஸ்
துரைராஜ் சத்திரம் வீதி.

**சிவகாசி**
25ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
மணீஸ் லாட்ஜ்
பஸ் நிலையம் பின்புறம்.

**பொள்ளாச்சி**
27ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
சக்தி ஹோட்டல்
144, கோவை ரோடு.

**மேட்டுப்பாளையம்**
28ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் காவேரி
K.G.C.காம்ப்ளக்ஸ், மெயின் ரோடு.

சிவராஜ் சித்த மருந்துகளை www.sivarajsiddha.com ஆன்லைன் மூலம் மருந்து பெறலாம். G Pay Paytm 98427 22500









7 தலைமுறைகள், 212 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட நிறுவனம்.

Advt

தர்மபுரி மாவட்டத்தில் கடந்த ஓராண்டுகளில் 139 போக்சோ வழக்குகள் பதிவு செய்துள்ளனர். இந்த வழக்குகளில் மிகமுக்கியமாகப் பார்க்கவேண்டியது, பள்ளி மாணவிகளிடம் பாலியல் சீண்டல் செய்த விவகாரத்தில் சிக்கிய 6 பேர் ஆசிரியர்களாகவே இருந்தனர்.



# ஆசிரியரின் பாலியல் சீண்டல்! பாதுகாக்கும் அ.தி.மு.க. மாஜி!

இந்நிலையில், இதே மாவட்டத்து பள்ளி ஆசிரியர் ஒருவர், தனது மாணவரின் அம்மாவுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாகவும், மாணவரின் அம்மாவின் செல்பேசி எண்ணை பெறுவதற்காக மாணவனை அடித்துள்ளதாகவும் குறிப்பிட்டு நக்கீரன் அலுவலகத்துக்கு ஆடியோப் பதிவுடன் கூடிய புகார் வந்திருந்தது. அந்த ஆடியோவை கேட்டு அதிர்ந்துபோனோம்.

அதில் மாணவரின் அம்மா, பணியிடமாற்றம் செய்யப்பட்ட ஒரு ஆசிரியையிடம் அதுகுறித்து விசாரிக்கும்போது, திருலோககசுந்தர் என்ற ஆசிரியரைப் பற்றி பேச்சு வரவும், "மேடம் உங்கிட்ட ஒரு உண்மையைச் சொல்லணும். நீங்க யாருகிட்டயும் சொல்லக்கூடாது, அது என் உயிருக்கே ஆபத்தா முடியும். அதே திருலோககசுந்தர் ஆசிரியர் தான் என்னை தப்பாக அழைத்தார்" என்று குறிப்பிடுகிறார்.

அந்த ஆடியோவில் சொல்லப்பட்ட ஆசிரியர் திருலோககசுந்தர், தர்மபுரியிலுள்ள இலக்கியம்பட்டி பள்ளியில் கணித ஆசிரியராகப் பணிபுரிந்துவருகிறார். அவரிடம் படித்த மாணவரின் தாயார் சுதா (பெயர் மாற்றப்பட்டுள்ளது), கணவரை இழந்தவர் என்பதால் அவரிடம் தகாத முறையில் நடந்துகொள்ள பலமுறை முயன்றிருக்கிறார். அதைத் தொடர்ந்து அவரிடம் பேச வாய்ப்பில்லாததால் மாணவனை அடித்து மிரட்டி அம்மாவின் செல்பேசி எண்ணைப் பெற்று, தகாத வார்த்தைகளால் பேசி அழைத்துள்ளார். அதையடுத்து, "என் தம்பி பத்திரிகையில் பணிபுரிகிறான், அவனிடம் சொன்னால் நீ அவ்வளவுதான்" என்று மிரட்டியபிறகு, அவர்மீது

www.nakkheeran.in

## பொருத்தமாக பொய் பேசக்கூடியவர்கள்தான் இவ்வுலகில் பரம யோக்கியன் மாதிரி வலம் வருகிறார்கள்!

நடவடிக்கை எடுக்கக்கோரி பள்ளிக்கே சென்றவர்களை, நுழைவாயிலிலேயே தடுத்து, சமாதானம் பேசி அனுப்பியுள்ளனர்.

பள்ளித் தலைமையாசிரியரிடம் பேசினோம். ஆடியோ, வீடியோ பதிவு எதுவும் செய்யவில்லையென்று செல்போனை அவர்முன் வைத்தபிறகே பேசத்தொடங்கினார்.

"சார் அவனை பற்றி விசாரித்தீங்களா? எல்லோருமே சொல்லியிருப்பார்களே? அவன் அப்படித்தான். பள்ளி மாணவிகளுக்கே பாலியல் தொந்தரவு கொடுத்து அடிவாங்கியவன்தான் இந்த திருலோகசுந்தர். இதில் இவன் மட்டுமில்லை, ஒரு டீமே உள்ளது. இவங்களுக்கு அரசியல் பின்புலம் இருப்பதால் இவங்க மேல போக்ஸோவெல்லாம் பதியாது. எது நடந்தாலும் மூடி மறைத்துவிடுவார்கள். இதை நான்தான் சொன்னேனென்று தெரிந்தால் என்னையே வேலையைவிட்டு தூக்கிடுவாங்க. அந்தளவிற்கு பவர்புல் டீம்" என்றார்.

"சரி, யார் அந்த டீம்?" என விசாரிக்க, திருலோகசுந்தரிடமிருந்தே தொடங்கினோம். இவர் பத்தாண்டுகளுக்கு முன்பாக தொப்பூர் பள்ளியில் பணிபுரிந்துள்ளார். அந்த பள்ளியில் அப்போது பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவராக இருந்தவரிடம் விசாரித்தோம்... அப்போது 9ஆம் வகுப்பு படிக்கும் மாணவியிடம் அவ்வப்போது பாலியல் சீண்டல் செய்து ஒருநாள் ஆபாச வீடியோவை அந்த மாணவியிடம் காட்டியுள்ளான். உடனே மாணவி கத்தியுள்ளார். பிறகு அது பிரச்சனையாக வெடித்து காவல் நிலையம் வரை சென்று வழக்குப் போடாமலே காப்பாற்றியிருக்கிறார்கள். அதன்பிறகு தமனம்பட்டி பள்ளியில் பணியில் சேர்ந்துள்ளார். அங்கேயும் இதேபோல சில்மிஷம் செய்து ஊர் மக்களே கட்டிவைத்து அடித்துள்ளனர். பிறகு தர்மபுரி அரசியல் பிரமுகர் ஒருவர் வந்து காப்பாற்றியுள்ளார். அதன்பிறகு இலக்கம்பட்டிக்கு வந்தபிறகும் பாலியல் விவகாரத்தில் சிக்கியுள்ளார். இந்த திருலோகசுந்தருக்கு குணசேகரன் என்ற நண்பர். இவரும் அதகப்பாடி மற்றும் பாலக்கோடு பள்ளிகளில் பாலியல் விவகாரத்தில் சிக்கியவர் தான். ஆனால் இவர்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையாம். காரணம், செந்தில்வேல் என்பவர் குணசேகரனுக்கு நண்பராம். இந்த செந்தில்வேலும் இதே கேஸ் தான். இவர் பணிபுரியும் பள்ளியில் இவர் பேச்சைக் கேட்காவிட்டால் யாரும் பணிபுரிய முடியாதாம். உடனே பணியிட மாற்றம் அவர்களுக்கு வந்துவிடுமாம்.

அந்தளவிற்கு எப்படி செல்வாக்கு வந்திருக்குமென விசாரித்தபோது தான், செந்தில்வேலுக்கு, முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன் மாமா உறவுமுறை. செஞ்சி ராமச்சந்திரனும், முன்னாள் உயர்கல்வித்துறை அமைச்சர் அன்பழகனும் பங்காளிகளாம். இதனால் அன்பழகன், தன்னுடைய சமுதாயத்தை சேர்ந்தவரும் விசுவாசியுமான கல்வித்துறை இணை இயக்குனர் பொன்குமார் மூலமாக இந்த விவகாரத்தை முடித்துத் தரச்சொல்லி பேசினால் உடனடியாக உயரதிகாரிகள் சொல்வதைக் கேட்டு தர்மபுரி சி.இ.ஓ. நடவடிக்கை எடுப்பாராம். பாலியல் விவகாரங்களில் சிக்கும் இந்த நெட்வொர்க்கிலிருக்கும் ஆசிரியர்களை முழுக்க முழுக்க காப்பாற்றுவது இந்த அ.தி.மு.க. மாஜி தான் என்கிறார்கள் இப்பகுதி மக்கள்.

இப்படி குற்றம் செய்பவர்களை ஒன்றுசேர்ந்து காப்பாற்றிவிடுவதன் காரணம் வெறுமனே சொந்தபந்தம் என்பதால் மட்டுமல்ல, இங்குள்ள பள்ளித் தொடர்பை வைத்து வேறொரு விவகாரமும் நடப்பதாக ஆசிரியர்களே கிசுகிசுத்தனர்.

எனவே அரசு இவ்விவகாரத்தை தீவிரமாக எடுத்துக்கொண்டு, தர்மபுரியிலுள்ள பள்ளிகள் அனைத்தையும் தனி டீம் அமைத்து, இங்குள்ள மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், பெற்றோர்களின் குறைகளைக் கேட்டறிந்தால், இப்பகுதியில் நடக்கும் அனைத்து விவகாரங்களும் வெட்டவெளிச்சமாவதோடு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு, பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோருக்கு பாதுகாப்பான சூழல் உருவாகும் என்கிறார்கள். ஆசிரியர்கள் என்ற போர்வையில் பாலியல் சேட்டைகளில் ஈடுபடும் கும்பல்களை அரசு களையெடுக்கப் போகிறதா? வேடிக்கை பார்க்கப் போகிறதா?

**–சே**



மாஜி அன்பழகன்

www.nakkheeran.in

# மாவலி பதில்கள்

எஸ். இளையவன், சென்னை

**தமிழகத்துக்கு ஒதுக்க வேண்டிய நிதிகளைக்கூட ஒதுக்காமல், எதனடிப்படையில் தமிழகத்தில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியமைக்கும் என்கிறார் அமித்ஷா?**

மக்கள் நிதியையும் நீதியையும் மறந்து, சாதியையும் மதத்தையும் பிடித்துக்கொண்டு ஓட்டுப்போடுவார்கள் என்ற முந்தைய அனுபவங்கள் தந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான்.

த.சத்தியநாராயணன், அயன்புரம்

**பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க., அ.தி.மு.க.வுடன் பா.ஜ.க. -எது சரி?**

படுத்துக்கிட்டும் போர்த்திக்கலாம். போர்த்திக்கிட்டும் படுத்துக்கலாம். பெரிய வித்தியாசமில்லை. ஆனால் தமிழகத்தின் தலையாய பெரிய இரு கட்சிகளில் ஒன்று என்ற அடிப்படையில், கூட்டணிக்குத் தலைமை வகிப்போம் என்று சொல்வதற்கான தகுதி எடப்பாடிக்கு இருக்கிறது. ஆனால் சில பிடிமானங்கள் பா.ஜ.க. பக்கம் இருப்பதாலும், மத்தியில் அதிகாரத்தில் இருக்கும் மமதையாலும் எடப்பாடியை படபடப்பிலேயே வைத்திருக்கிறார்கள்.



வண்ணை கணேசன், கொளத்தூர்


**ஆந்திராவில் இனி 10 மணி நேரம் வேலையென அம்மாநில அரசு அறிவித்துள்ளதே?**

உலகெங்கும் குரோனி கேப்பிடலிசம் வளர்ந்துவருகிறது. அதாவது, அரசாங்கம் குறிப்பிட்ட சில கார்ப்பரேட்டுகளுக்கு தாராள சலுகை காட்டும். பதிலுக்கு அந்தக் கம்பெனி தேர்தல் நிதி என்ற முறையான வழிகளிலும், முறையற்ற வழிகளிலும் அந்த அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கு ஆதாயத்தில் பங்களிப்பார்கள். தொழிலாளர் வர்க்கம் போராடிப் பெற்ற உரிமைகளை, கார்ப்பரேட்டுகள், அரசாங்கத்துடன் மேற்கொள்ளும் திருட்டுத்தனமான நெருக்கத்தின் மூலம் மெல்லப் பறித்துவருகின்றனர். ஆந்திரா மட்டும் இதில் விதிவிலக்கா என்ன? 2023-ல் தொழிற்சாலைகள் திருத்த சட்ட மசோதா தமிழகத்திலும்தான் நிறைவேற்றப்பட்டது. மறந்துவிடாதீர்கள்.

கே.எம். ஸ்வீட்முருகன், கரடிகொல்லப்பட்டி

**நேரம் வரும்போது திருமணம் செய்துகொள்வேன் என்கிறாரே சிம்பு?**

சிம்புவுக்கு அவசரமில்லை. திரிஷாவும்கூட பதற்றப்படவில்லை. சினிமாவில் திருமணம் செய்துகொள்ளாத முன்னுதாரணங்கள் நிறைய உண்டு. அதையெல்லாம் சிம்புவின் பெற்றோர் பார்த்துக் கொள்வார்கள். நானும் நீங்களும் படத்தில் அவர் ஜோடிபோட்டு நடிக்கும் நாயகியுடன் நன்றாக நடித்தாரா, டான்ஸ் ஆடினாரா... காதல்செய்தாரா... என்று மட்டும் பார்த்துக்கொள்வோம்.



மா.சந்திரசேகர், மேட்டுமகாதானபுரம்

**பா.ஜ.க.வும் காங்கிரஸும் மறைமுக உறவிலிருப்பதாகக் கூறி இந்தியா கூட்டணியிலிருந்து ஆம் ஆத்மி வெளியேறியிருப்பது பற்றி?**

முன்பு ஆம் ஆத்மியை பா.ஜ.க. பி டீம் என்றது காங்கிரஸ். இப்போது ஆம் ஆத்மி குற்றச்சாட்டு வைக்கிறது. இதே ஆட்டத்தை இரு கட்சிகளும் தொடரும் வரைக்கும் பா.ஜ.க.வுக்கு சந்தோஷம்.

எஸ். அர்ஷத் ஃபயாஸ், குடியாத்தம்

**திருவண்ணாமலை நகரில் இறைச்சிக்கு தடைவிதித்து 'புனித நகரமாக' அறிவிக்கவேண்டும் என்கிறாரே அர்ஜுன் சம்பத்?**

எலும்பின் மீது இறைச்சி போர்த்திய உடல்தான் மனிதனும். இறைச்சிக்குத் தடைவிதிப்பதாயிருந்தால் திருவண்ணாமலையில் வசிக்கும் 25 லட்சம் பேரை முதலில் வெளியேற்றவேண்டும். அப்படியே இறைச்சிக் கடைகளுக்கு

சில நிராகரிப்புகள், நம்மை யார் என்று உணர வைக்கிறது;
சில நிராகரிப்புகள், நாம் எப்படி இருக்கவேண்டும் என்று கற்றுத் தருகிறது!

தடை விதித்தாலும், மலையில் ஒரு பறவை செத்து அழுகிக்கொண்டிருப்பதாகக் கொள்வோம். அதனால் திருவண்ணாமலையின் புனிதம் கெட்டுவிடுமா?

நடேஷ்கன்னா, கல்லிடைக்குறிச்சி

**சங்க காலத்தில் அவ்வையாரும் அதியமானும் கள் குடித்துவிட்டுத்தான் பேசுவார்கள் என சீமான் கூறியிருப்பதை எப்படிப் பார்க்கிறீர்கள்?**


ஒரு கவிஞரை மன்னன் எப்படி உபசரித்தான், அன்பு பாராட்டினான் என்பதுதான் அந்தப் பாடலின் பேசுபொருள். அதை அடுத்தடுத்து வரும் வரிகளும் உணர்த்தும். களைப்பில் முரசுக் கட்டிலில் படுத்துறங்கிய மோசிகீரனாருக்கு மன்னன் சேரமான் இரும்பொறை கவரி வீசிய கதையும் உண்டு. அதை புலவர்கள் மீதான மன்னர்களின் மதிப்பு என்பதாக மதிப்பிடவேண்டும். அதைவிட்டு குடியின் பெருமையைக் குறித்தோ, கள்ளின் சிறப்பைக் குறித்தோ புறநானூறு பாடியதாக எடுத்துக்கொள்ளக்கூடாது.



ப.விஜய், வேலூர்

**அயோத்தி ராமர் கோவிலில் பிரசாத மோசடி என்று சொல்கிறார்களே... என்ன?**

ராமர் கோவில் திறப்பு விழாவையொட்டி பிரசாதம் இலவசம், தபால் செலவு மட்டும் அனுப்பினால் போதும் என ஒரு வலைத்தள விளம்பரம் பலரது கண்ணையும் ஈர்த்தது. இந்தியர்களுக்கு ரூ.51, அமெரிக்கர்களுக்கு 11 டாலர். கிட்டத்தட்ட 6,31,000 பேர் காசு அனுப்பியிருக்கிறார்கள். 3 கோடியே 85 லட்ச ரூபாய் வசூல். திறப்பு விழா முடிந்ததும், ராமர் கோவில் பிரசாதம் வரவில்லை என நூற்றுக்கணக்கான புகார்கள் வர, விசாரித்தால் ஆஷிஷ் சிங் என்பவனின் கைவரிசை எனத் தெரியவந்திருக்கிறது. கைதுசெய்து 2 கோடி வரை கைப்பற்றிவிட்டார்கள். ●



## (57) சிறையில் கொல்லப்பட்ட கம்யூனிஸ்டுகள்!

நெடும் வாசல், சிறைக் கதவுகளை தாண்டி அந்த செய்தி வந்து சேர்ந்திருந்தது. ஒரு சிறையிலிருந்து மற்றொரு சிறைக்கு மாற்றம் செய்யப்படும் கைதிகளின் வழியாக, இந்த செய்தி வந்திருக்க வேண்டும். அந்த செய்தியால் ஏற்பட்ட பதட்டத்தைப் பற்றி தோழர் நல்லகண்ணு என்னிடம் கூறியிருக்கிறார். பெற்ற அனுபவங்களைக் கற்றுத்தர இந்த மறைக்கப்பட்ட வரலாறு நமக்காக இன்று காத்திருக்கிறது. தியாகம் என்பது வரலாற்றின் முடிவு அல்ல. அது வரலாற்றின் தொடர்ச்சி. கப்பல் கரைசேருவதற்கான கலங்கரை விளக்கம்.




ஆரம்பத்தில் அந்த செய்தி உண்மைதானா என்பதை அறிந்துகொள்ள முயற்சி செய்ததாக தோழர் கூறினார். ஒரு சிறையில் நடக்கும் செய்தி இன்னொரு சிறைக்கு வந்து சேருவது அத்தனை சுலபமானது அல்ல. இத்தனைபேர் செத்துப்போயிருப்பார்களா என்ற சந்தேகம் அவருக்கு வந்து விட்டது. இதில் உண்மையும் உண்மையற்றவையும் கலந்திருக்கலாம். இதன் உண்மைத் தன்மையை ஆராயும் அவசியம் எங்களுக்கு வந்துவிட்டது என்கிறார். ஆனால் அவருக்கு கிடைத்த தகவலை விட மனித குரூரங்கள் அங்கு கூடுதலாகவே நடந்ததைப் பின்னர் அறிந்து

## எதையும் சாதிக்க விரும்பும் மனிதனுக்கு நிதானம்தான் அற்புதமான ஆயுதமே தவிர கோபம் இல்லை!

கொண்டோம் என்கிறார். இதைப் பற்றிய மேலதிக தகவலை வேறு ஒருவரிடமிருந்து தெரிந்து கொண்டேன். இவர் நெல்லை மாவட்டத்தில் தோழர் நல்லகண்ணுவுடன் இணைந்து பிற்காலத்தில் இயக்கத்தை கட்டியவர்களில் முக்கியமானவர்.

நெல்லை மாவட்டத்தின் சிவகிரி ஜமீனை சார்ந்தவர் இவர். தமிழ்நாட்டின் ஒவ்வொரு ஜமீனுக்கும் ஒரு குணம் உண்டு என்றால், சிவகிரி ஜமீன் இவை அனைத்திலிருந்தும் வேறுபட்டிருந்தது. மிகவும் அடிமைத்தனம் இங்கு இருந்தது. அதிலும் தலித் மக்கள் இவர்கள் வசிக்கும் தெருவில் தோளில் துண்டு போட்டுக்கொண்டோ, காலில் செருப்பணிந்து கொண்டோ செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தார்கள். அதை அவர்கள் மீறினால் மிகவும் மோசமான தண்டனை அவர்களுக்குக் காத்திருந்தது. இதை எதிர்த்து ஒரு இளம் கம்யூனிஸ்டு களம் இறங்கினார். இதில் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் ஜமீன்தார் எந்த சாதியை சார்ந்தவரோ அதே சாதியில் இவரும் பிறந்திருந்தார். தனது தீவிரம் மிகுந்த ஒடுக்குமுறை எதிர்ப்புச் செயல்களால் பல்வேறு நெருக்கடிகளை ஜமீனுக்கு கொடுத்துக்கொண்டிருந்தார். நம் சாதிக்காரன் இப்படி சாதிகெட்டுத் திரிகிறானே என்ற கோபம் ஜமீனுக்கு தலைக்கேறிவிட்டது.

பரம்பரையாக அடிமை உணர்வில் வளர்க்கப்பட்ட தலித் மக்களுக்கு தொடர்ந்து தைரியம் ஊட்டி வந்தார் இவர். தலித் மக்களின் குடிசைகள் தெற்குக் கோடியில் இருந்தன. வடக்குப் பக்கத்தில் ஜமீனும் அவரது கெடுபிடி மிகுந்த கூட்டமும் வாழ்ந்து வந்தனர். அந்த இளைஞர் தலித் மக்களை தோளில் துண்டு போட வைத்தார். காலில் செருப்பு அணியவைத்தார். இவரே முன்னின்று ஜமீன்தெரு வழியாக அழைத்துச் சென்றார். அவரை கல்லால் அடித்தார்கள். சாணியை கரைத்து மாடியிலிருந்து வீசினார்கள். இதற்குப் பயந்து இவரோ, தலித் மக்களோ தெருவில் நடப்பதை நிறுத்தவில்லை. அவர்கள் தொடர்ந்து நடந்துகொண்டேயிருந்தார்கள். அவரை மாவீரன் என்று தோழர் நல்லகண்ணு அடிக்கடி குறிப்பிடுவார். இவர்தான் அனைவராலும் கே.சி. என்று அழைக்கப்படும் தோழர் சிவகிரி செல்லையா.


சிவகிரி கே. செல்லையா

அப்பொழுதுதான் எதிர்பாராத அந்த சூழல் வந்துசேர்ந்தது. கடுமையான உணவுத் தட்டுப்பாடு. தலைமறைவு கம்யூனிஸ்டுகளுடன் இணைந்து கம்யூனிஸ்டு ஆதரவாளர்கள் பதுக்கலை எடுத்து எளிய மக்களுக்கு வழங்கினர். இதைப் பற்றிய குறிப்பு ஒன்றும் கிடைத்துள்ளது. 1949ம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் தேதி செல்லையா தலைமையில் ஒரு பெருங்கூட்டம், பதுக்கல் அரிசியை கையும் களவுமாகப் பிடிக்கிறது. போலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட அரிசியின் ஒரு பகுதியை மீண்டும் பதுக்கல்காரர்களிடம் ஒப்படைக்க போலீஸ் முயற்சிசெய்கிறது. தடுப்பதில் காவல்துறைக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் மோதல் தொடங்கிவிடுகிறது. கொள்ளை அடித்தார்கள் என்று வழக்குப் பதிவு செய்யப்பட்டு செல்லையாவும், மேலும் 20 தோழர்களும் சங்கரன்கோயில் சப்-ஜெயிலில் வைக்கப்படுகின்றனர். செல்லையா 9 மாதங்கள் விசாரணைக் கைதியாக இங்கு வைக்கப்படுகிறார். பின்னர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது.

தென் தமிழ்நாட்டின் கைதிகள் மதுரை சிறையிலிருந்த போதும் இவரை சிறை வைத்திருந்த இடம் இன்றைய தமிழ் நாட்டில் இல்லை. மலையாள தேசத்தில் இருந்தது. கேரளத்தின் கண்ணூர் சிறைச்சாலை. அங்கிருந்து சேலம் சிறைக்கு மாற்றம் செய்யப்பட்டார்.

சேலம் சிறைச் சம்பவம் பற்றி அறிந்து கொள்ள நான் முயன்றபோது, தோழர் நல்லகண்ணு கூறிய தகவல்கள் ஒரு அரசியல் ஆழத்தை எனக்குத் தந்தது. தோழர் செல்லையாவின் விவரிப்பு கள நிலவரத்தை உணர்வுப்பூர்வமாக விளக்குவதாக இருந்தது. பிரச்சனை உண்ணா



–சி.மகேந்திரன்

Vol.38
Issue No:18
நக்கீரன்

நக்கீரன் பப்ளிகேஷன்ஸுக்காக, நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ், 105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14ல் அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்:
**நக்கீரன் கோபால்**
தொலைபேசி: 044-26881700, 26881800
மின்அஞ்சல் : nakkheeran2003@yahoo.com
nakkheeran2003@gmail.com
இணையம்: www.nakkheeran.in

**முதன்மை பொறுப்பாசிரியர்:** மாவலி
**முதன்மை துணை ஆசிரியர்கள்:**
ஆரூர் தமிழ்நாடன், இரா.த.சக்திவேல், ராம்கி
**முதன்மை சிறப்பு நிருபர்கள்:**
இரா.இளையசெல்வன்,
தாமோதரன் பிரகாஷ்
**துணை ஆசிரியர்கள் :**
க.சுப்பிரமணியன், சிவலிங்கம், கவுதமன்,
எம்.செந்தில்குமார், தா.மகாராஜன்
**ஸ்பெஷல் நியூஸ் Correspondent :** நாகேந்திரன்
**முதன்மை நிருபர்கள் :**
ஜீவா தங்கவேல், பி.சிவன், சுப்பு
**தலைமை நிருபர்கள்:** சக்திவேல், எஸ்.பி.எஸ்., ராஜா,
பகத்சிங், செல்வகுமார், துரை.மகேஷ்,
**சீனியர் நிருபர்கள்:** அண்ணல், அரவிந்த்
**நிருபர்கள்:** அருண்பாண்டியன், மணிகண்டன்,
இளையராஜா

**முதன்மை வடிவமைப்பு :** குரு
**தலைமை வடிவமைப்பாளர்கள்:**
துரை.கணேசன், ஆர்.சி.மதிராஜ், த.சரவணப்பெருமாள்
**துணை வடிவமைப்பாளர்:**
ச.ராஜேந்திரன்
**தலைமை புகைப்படக் கலைஞர்கள்:**
எஸ்.பி.சுந்தர், ஸ்டாலின்
**துணைத் தலைமை புகைப்படக் கலைஞர்:**
ப.ராம்குமார்

**மேலாண்மை நிர்வாகி : ஆர்.குருசாமி**
**பொது மேலாளர் :** எஸ்.சுரேஷ்குமார்
**நிர்வாக மேலாளர் :** சி.பிரான்சிஸ்
**கணக்கு & சந்தா மேலாளர் :** சி.மோகன்
**சந்தா பிரிவு உதவியாளர்:** பார்த்திபன்
**முதன்மை காசாளர் :** பி.என்.ஆனந்த்
**தயாரிப்பு மேலாளர்கள் :**
பி.மோகன், ஆர்.கௌரிநாதன்
**விநியோக மேலாளர் :** கே.மலைக்கண்ணன்
**விநியோக உதவி மேலாளர் :** என்.சத்தியசீலன்
**விநியோகம் :** லாரன்ஸ், அரவிந்த்
**தயாரிப்பு ஒருங்கிணைப்பாளர் :** து.கண்ணன்
**தயாரிப்பு உதவி :** எச்.கண்ணன், பி.கணேசன்,
சந்திரோதயம், பி.வெங்கடேஷ்
**விளம்பர மேலாளர் :**
சி.சுரேஷ்குமார்
**பிரதிநிதி:** கே.சிவகுமார்
**கணக்கு ஒருங்கிணைப்பு :** ஷபீர்அகமது, வெங்கடேஷ்
**தலைமை கள மேலாளர் :** ஆர்.சீனிவாசன்
**கள மேலாளர்கள் :** கந்தசாமி, பரமசிவன், திருமலை
**பதிப்பக மேலாளர் :** தனுஷ்
**துணை பதிப்பக மேலாளர் :** கிறிஸ்டோபர்
**பதிப்பக உதவி :** ராமலிங்கம்,
யூனூஸ், பாண்டியன்

**Legal Manager : பாரிஸ்டர். ஆர்.வி.சாருமதி**

**Our Bankers : M/s. INDIAN BANK, Sterling Road Branch**

சிறப்புக்கட்டுரைகள் மற்றும் பேட்டிகளின் கருத்துக்கள் அதைத் தெரிவித்தவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத் தன்மைக்கு நக்கீரன் நிர்வாகம் பொறுப்பல்ல.

விரதப் போராட்டத்திலிருந்துதான் தொடங்கியது. மற்ற சிறைச்சாலைகளிலும் நடந்ததைப் போல இங்கும் கம்யூனிஸ்டு கைதிகளை அரசியல் கைதிகளாக நடத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

அப்பொழுது சேலம் சிறையில் மொத்தம் 350 கம்யூனிஸ்டு கைதிகள் இருந்ததாகக் கூறுகிறார். அன்று சென்னை மாகாண சிறைச்சாலைகளிலேயே மிகவும் தரமற்ற சிறைச்சாலை என்று சேலம் சிறைச்சாலை கூறப்படுகிறது. புளித்து நாற்றம் எடுக்கும் கஞ்சி, கல்லும் மண்ணும் கலந்த சோளக்களி, முன்பிருந்த கைதிகள் பயன்படுத்திவிட்டு, அடுத்த கைதிகளுக்கு கொடுத்துவிட்டுச் செல்லும் கந்தலான கால்சட்டைகள், கடும் குளிரில் உடலை மறைத்துக் கொள்ள வழங்கப்படும் கிழிந்துபோன கோணிப்பைகள். இந்த சிறையின் நிலவரத்தை அறிந்து கொள்ள இவை நமக்கு போதுமானதாக இருக்கிறது. இந்த நிலை மனிதர் என்னும் தகுதியை அவர்களிடமிருந்து பறித்துவிட்டது.

தமிழ்மொழி பேசும் கைதிகளுக்கு இணையாக மலையாளம், தெலுங்கு மொழி பேசும் கைதிகளும் இருந் தனர். அன்றைய சென்னை மாகாணம் ஒரிசாவின் ஒரு மாவட்டம். ஆந்திரா, கன்னட, கேரளாவின் சில பகுதி என்று விரிந்திருந்தது. மாற்று மொழி பேசும் கைதிகளில் பெரும்பாலானவர்கள் கம்யூனிஸ்டு கைதிகள். நாங்கள் எல்லாம் உண்ணாவிரத தயாரிப்பில் இருந்தோம் என்கிறார் செல்லையா. உண்ணாவிரதம் கம்யூனிஸ்டு கோரிக்கை என்றாலும், இதில் சிறை அதிகாரிகள் பெரிதும் பயந்துபோயிருந்தார்கள் தாங்கள் செய்த லஞ்சமும், மோசடித்தனங்களும் அம்பலமாகப்போகிறது என்று. சேலம் சிறைச்சாலை ஊழல் பெருச்சாளிகள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்த காலம் அது.

முதலில் தடியடிப் பிரயோகத்தை சிறைக்காவலர்கள் தான் தொடங்கியிருக்கிறார்கள். கைதிகள் இதை எதிர் பார்க்கவில்லை. இவர்களுக்கு என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை. உண்ணாவிரதம் இருப்பது தங்கள் உரிமை, இதை சிறை நிர்வாகம் பெரிதாக எடுத்துக்கொள்ளாது என்ற எண்ணம் போராட்டத்தை தொடங்கிய தலைவர்களுக்கு இருந்தது. கடைசியில் தாக்குதலை எதிர்கொள்ளத் தொடங்கினார்கள்.

விளைவு, மத்திய சிறைச்சாலைக்குள்ளே 19 கம்யூனிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். மூன்று பேர் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியிலும் மருத்துவமனையிலும் இறந்து போனார்கள். கம்யூனிஸ்டுகள் சிந்திய இந்த ரத்தம் இன்றும் பெரும் மதில்சூழ் சேலம் சிறைச்சாலையில் வரலாறாய் நிமிர்ந்து நிற்கிறது.

**(தொடரும்)**








CNC


GUIDES - கைடுகள்

55 வருட நம்பிக்கை

DISCOUNT UPTO 25% - 40%














தேவைக்கு ORDERS **8939882456** அழைக்க CALL

தங்கள் முகவரியை மேற்கண்ட எண்ணிற்கு வாட்ஸ் அப் செய்து கைடுக்கான சலுகை விலை மற்றும் பெறுதல் குறித்த விவரங்களை அறிந்து கொள்ளவும்.

தொகை செலுத்தி பிரதியை பெற ஸ்கேன் செய்யவும்.

**DHEERAN PUBLISHING HOUSE** (A UNIT OF NAKKHEERAN GROUP)

105, Jani Jahan Khan Road, Royapettah, Chennai 600 014 E-mail : dheeranpubhouse@gmail.com

Advt

# அதிரடி ஐ.ஜி.!
# அலறும் இன்ஸ்பெக்டர்

**வடக்கு மண்டலத்திலுள்ள 5 மாவட்டங்களில் எஸ்.பி. இன்ஸ்பெக்டர் பதவிகள் காலியாக இருக்கிறது என புலம்புகிறார்கள் காவல்துறை வட்டாரத்தில்.**

வடக்கு மண்டலத்தின்கீழ் காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம் சரகங்கள் (டி.ஐ.ஜி.கள்) உள்ளன. இந்த மூன்று சரகத்தின்கீழ் காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் என 10 மாவட்டங்கள் உள்ளன. மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு கண், காது, மனசாட்சியாக இருக்கவேண்டியவர்கள் எஸ்.பி. தனிப்பிரிவு ஆய்வாளர்கள். இவர்களின் பணி, மாவட்டத்தில் நடக்கும் அனைத்து தகவல்களையும் எஸ்.பி.யின் கவனத்துக்கு கொண்டுசெல்வது, இதற்காக ஒவ்வொரு காவல்நிலையத்திலும் எஸ்.பி., ஏட்டுக்கள் இருப்பர்.

இவர்கள் காவல்நிலைய எல்லைக்குள், காவல்நிலையத்துக்குள் எது நடந்தாலும் உடனுக்குடன் எஸ்.பி. இன்ஸ்பெக்டருக்கு தெரிவிக்கவேண்டும், அதனை அவர் எஸ்.பி.க்கு தெரிவிப்பார். எஸ்.பி. உத்தரவை காவல்நிலைய ஆய்வாளர்களுக்கு தெரிவித்து அதனைக் கண்காணித்து எஸ்.பி.யிடம் ரிப்போர்ட் தருவது, மாவட்ட நிலவரம் குறித்து தினமும் ஐ.ஐ., டி.ஐ.ஜி.க்கு புல்லட்டின் அனுப்புவது, உளவு அமைப்புகள் அனுப்பும் தகவல்களை ரகசியமாக விசாரிப்பது, எஸ்.பி., ஏ.டி.எஸ்.பி., டி.எஸ்.பி.கள் குறித்த தகவல்களை உயரதிகாரிக்கு அனுப்புவதும் எஸ்.பி. இன்ஸ்பெக்டர் பணி.

எஸ்.பி. இன்ஸ்பெக்டர்கள் சிலர் தங்கள் பணியை மறந்து அதிகாரத்தை வைத்து பணம் சம்பாதிப்பதில்



ஐ.ஜி. அஸ்ராகார்க்

கள்!

மட்டுமே குறியாக இருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டு வடக்கு மண்டல ஐ.ஜி. அஸ்ரா கர்க்கை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. அது உண்மையா என தனது தனி டீம் மூலம் 10 மாவட்ட எஸ்.பி. இன்ஸ்பெக்டர்கள் குறித்து ரகசிய விசாரணை நடத்தினார். எஸ்.பி.க்களாக இருப்பவர்கள் 90 சதவிகிதம் தனிப்பிரிவு இன்ஸ்பெக்டரையே நம்புவார்கள். அதை பயன்படுத்திக்கொண்டு தங்களது திறமையை பணம் சம்பாதிப்பதில் மட்டுமே சிலர் காட்டுகிறார்கள். குற்றச்சம்பவங்களில் ஈடுபடுபவர்களோடு நெருக்கம், தவறு செய்யும் அதிகாரிகளைக் காப்பாற்ற விசாரணையை திசைதிருப்புகிறார்கள் என ஐ.ஜி.யின் விசாரணையில் தெரியவந்தது.

உதாரணமாக, திருப்பத்தூர் மாவட்ட எஸ்.பி. இன்ஸ்பெக்டரின் உறவினரான இளைஞரொருவர், திருவண்ணாமலையில் தொழிலதிபர் மகனைக் கடத்த பெங்களூருவிலிருந்து வந்த ரவுடி கும்பலுக்கு பலவழிகளில் உதவியாக இருந்துள்ளார். அந்த கும்பலை பிடித்தபோது தனது சொந்தக்கார பையனை கைதிலிருந்து தப்பிக்கவைத்தார். இந்த தகவல் ஐ.ஜி. கவனத்துக்குச் சென்றபோது அதிர்ச்சியாகிவிட்டார். அந்த இன்ஸ்பெக்டர் குறித்து அவரது தனிப்படை விசாரித்தபோது, வாணியம்பாடி, ஆம்பூர் பாலாற்றில் நடக்கும் மணல் கொள்ளைக்கு துணைபோய் சம்பாதிக்கிறார், மாவட்டத்தில் நடக்கும் சட்டவிரோத விஷயங்களின் மீது நடவடிக்கை எடுப்பதில்லை, எஸ்.பி.க்கு தகவல் தெரியப்படுத்தாமல் மறைத்து தனி ராஜாங்கம் நடத்துகிறார் என எஸ்.பி.யே தனி நோட் வைத்தார்.

திருவண்ணாமலை எஸ்.பி. இன்ஸ்பெக்டராக இருந்தவர் சுமார் 70 ஏக்கர் விவசாய நிலத்தை வாங்கியுள்ளார். ஒரு ஏக்கர் மிகக்குறைவாக 1 லட்சம் என்றாலும் 70 லட்சம் இவருக்கு எங்கிருந்து வந்தது? என அவரால் பாதிக்கப்பட்டவர்கள் ஆதாரத்தோடு ஐ.ஜி.க்கு புகார் அனுப்பினர். அதனை விசாரித்தவர், உண்மை எனத் தெரிந்து அதிர்ச்சியாகிவிட்டார். லஞ்சஒழிப்புத் துறையும் அவர் மீது வழக்குப் பதிவு செய்ய ஃபைல் அனுப்பியுள்ளது, அந்த இன்ஸ்பெக்டர் பல வழிகளில் ஐ.ஜி.யிடம் அந்த ஃபைலை நிறுத்தி வைக்க முயற்சித்துவருகிறார்.

அதேபோல் சில இன்ஸ்பெக்டர்கள், டி.எஸ்.பி.க்களின் இல்லீகல் ஆக்டிவிட்டிஸ் குறித்தும் அறிந்தார். அதனால் வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் எஸ்.பி. இன்ஸ்பெக்டர்களை இடமாற்றம் செய்தார். காலியாகவுள்ள இடத்துக்கு புதிய இன்ஸ்பெக்டர்களை உடனே நியமனம் செய்யவில்லை. அங்கு புதிதாக நியமனம் செய்ய இன்ஸ்பெக்டர்கள் பின்னணியை அலசினார் ஐ.ஜி.

வேலூர் மாவட்டத்தில் இன்ஸ்பெக்டர்கள் பார்த்தசாரதி, நாகராஜ், மைதிலி, சீனிவாசன், காண்டீபன், விஜய் உட்பட 10 பேர் தனிப்பிரிவு இன்ஸ்பெக்டராக முயற்சித்தனர். அப்போது மாவட்ட அமைச்சர் துரைமுருகன், வேலூர் எஸ்.பி. மதிவாணன் பெயரைச்சொல்லி, குற்றப்பிரிவு டி.எஸ்.பி திருநாவுக்கரசு, டி.எஸ்.பி பழனி டீம் லாபி செய்தது. எஸ்.பி. இன்ஸ்பெக்டர் மற்றும் முக்கிய காவல்நிலையங்களில் தங்களுக்குத் தோதான இன்ஸ்பெக்டர்கள் இருக்கவேண்டும் என இவர்கள் லாபிசெய்து நியமிக்கப்பட்டதை அறிந்து அதிர்ச்சியானார். இதனால் எஸ்.பி. இன்ஸ்பெக்டராக யாரையும் தேர்வு செய்யவில்லை. விழுப்புரம் மாவட்ட எஸ்.பி. இன்ஸ்பெக்டராக 10 தினங்களுக்கு முன்புதான் எஸ்.ஐ.யாக இருந்து பதவிஉயர்வு பெற்ற பிரகாஷ் என்கிற ஜூனியரை நியமித்துள்ளார்.

மற்ற மாவட்டங்களில் கடந்த 3 மாதமாக தனிப்பிரிவு இன்ஸ்பெக்டர் பதவி காலியாக இருப்பதால் பணி நெருக்கடி அதிகமாகவுள்ளது என எஸ்.பி தனிப்பிரிவில் புலம்பல் குரல்கள் கேட்பதால், ஒவ்வொரு மாவட்டத்திலும் தனது டீம் மூலம் திறமையான இன்ஸ்பெக்டர்களைத் தேடிவருகிறார் ஐ.ஜி. எல்லாத்தையும் கண்ணுல வெளக்கெண்ணய் விட்டு கண்காணிக்கிறார் எஸ்.பி. இன்ஸ்பெக்டர் பொறுப்பே வேணாம்னு அலறி ஓடுறாங்க. யாரும் தப்பு செய்யமாட்டோம்னு முன்வந்து நிற்கல என்கிறார்கள் ஐ.ஜி. அலுவலகத் தரப்பில்.

யார் தனிப்பிரிவு இன்ஸ்பெக்டராக வரப்போகிறார் என ஒவ்வொரு மாவட்ட காவல்துறையினரும் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர்.

-து. ராஜா

# நாகர்கோவிலில் தள்ளாடும் தாமரை!

**—ஸ்கேன் ரிப்போர்ட்!**

**2026 தேர்தலில் 40 எம்.எல்.ஏ.க்களை கொண்டு வருவோமென பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் சூளுரைத்த நிலையில், பா.ஜ.க.வுக்கு செல்வாக்குள்ள மாவட்டங்களில் ஒன்றான கன்னியாகுமரியின் தலைநகரமான நாகர்கோவில் தொகுதியின் பா.ஜ.க. எம்.எல்.ஏ.வான எம்.ஆர்.காந்தி, தொகுதி மக்களுக்கு என்ன செய்தாரென்ற கேள்வியை தொகுதிவாசிகளிடம் வைத்தோம்.**



"2021-ல் தி.மு.க.வின் ஜாம்பவானான சுரேஷ்ராஜனை வீழ்த்தி எம்.எல்.ஏ.வான காந்தியின் வெற்றிக்குப் பின்னால் ஜாதி, மதம், கட்சி பாராமல் வாக்களித்த மக்கள் சக்தி இருந்தது. மேலும், 'எனக்கு வயதாகிவிட்டதால் ஒருமுறையாவது எம்.எல்.ஏ.வாகி மக்களுக்கு நல்லதை செய்துவிட்டு, எனது அரசியல் பயணத்தை முடித்துக் கொள்வேன்' என்று தெருத்தெருவாக உருக்கமாகப் பேசியதால் அனுதாபத்தோடு நாங்கள் அவரை ஆதரித்தோம். சொல்லப்போனால் தி.மு.க.காரன்கூட காந்திக்கு ஓட்டு போட்டான். ஆனால் வெற்றிபெற்ற பின்னர் அவர் சொன்ன எதையுமே செய்யவில்லை. தொகுதிப் பக்கமும் வரவில்லை. அவருக்கு பக்கத்து ஊரான பெரியவிளையில், 'கண்டா வரச் சொல்லுங்க! காந்தியை கண்டா வரச் சொல்லுங்க'ன்னு சுவரில் எழுதியதை பா.ஜ.க.வினர் அழித்த சம்பவமும் உண்டு. இப்போது, மீண்டும் ஒருமுறை 2026-ல் வாய்ப்பு தாருங்களென்று கேட்டு வரவிருக்கிறாராம். நாங்களும் அவரிடம் கேட்க நிறைய இருக்கிறது" என்றனர்.

நம்மிடம் பேசிய பெண்கள் சிலர், "நாகர்கோவில் தொகுதி மக்களுக்கு முக்கிய குடிநீர் ஆதாரமாக இருக்கும் முக்கூடல் அணை, கோடை காலத்தில் முழுக்க வறண்டுவிடும். அப்போது குடிநீருக்காக மக்கள் அலையவேண்டியிருக்கும். இதனால் கோடைக்காலத்தில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்கும்விதமாக ரூ.296 கோடி மதிப்பிலான புத்தன் அணை குடிநீர்த் திட்டத்தை கொண்டு வந்து, 2024 ஆகஸ்ட் மாதம் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். ஆனால் இன்று

www.nakkheeran.in

வரை வீடுகளுக்கு குடிநீர் கொண்டு செல்வதற்கான பைப் கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை. இதற்காக காந்தி எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவரிடமே நேரில் முறையிட்டாலும் மாநகராட்சி மேயரை கைகாட்டுகிறார். அப்படியானால் இவர் எதற்கு எம்.எல்.ஏ.வாக இருக்கிறார்?

இங்கு வீட்டுக்கு வீடு படித்த பிள்ளைகள் அதிகம் இருக்கிறார்கள். எம்.ஆர்.காந்தி ஓட்டுக் கேட்டு வரும்போது, 'ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி இருக்கு. நான் எம்.எல்.ஏ. ஆயிட்டேன்னா எதாவது ஒரு தொழிற்சாலையை கண்டிப்பா கொண்டுவருவேன்'னு சொல்லி நாலு வருஷம் ஓடிடுச்சு. காந்தியை கோவில் கும்பாபிஷேகம் அல்லது கொடை விழாவில்தான் பார்க்கவே முடியுது. தொழிற்சாலைக்கு பதிலா இந்து கோவில்களுக்கு கலையரங்கத்தை தாராளமா கட்டிக்கொடுக்கிறார். புத்தேரி குளத்தை சுத்தம் செய்வேன்னு சொன்னார், ஆனால் குளத்தில் பாதியை இப்போது காணவில்லை" என்றனர்.

வலம்புரிவிளை பகுதியை சேர்ந்த மக்களோ, ''மாநகராட்சியின் ஒட்டுமொத்த குப்பையும் மலைபோல் குவிந்துகிடக்கிறது. இதனால் சுற்றி வசிக்கும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குப்பையில் அடிக்கடி ஏற்படும் தீ, வீடுகளுக்கு பரவிடுமோ என்ற அச்சமும் இருக்கிறது. இந்த குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுப்பேன்னு சொல்லி ஜெயிச்சுவந்தவர், இப்போதுவரை கண்டு கொள்ளவேயில்லை. இவரால் ஊர் மட்டுமல்ல, தொகுதியே நாறுது" என்றனர்.

இத்தொகுதி விவசாயிகளோ, "இங்குள்ள தட்பவெப்ப நிலைக்கு, அரசின் நெல் ஈரப்பத விதிமுறை ஒத்துவராது. எனவே அதைத் தளர்த்தி, இங்குள்ள வெப்பநிலைக்கேற்ப நெல் உலர் கிடங்கு அமைக்க வேண்டுமென்று காந்தியிடம் எத்தனையோ மனுக்கள் கொடுத்தோம். சட்டசபையில் இதுவரை வாய் திறக்கவேயில்லை. எம்.எல்.ஏ. ஆகும் முன்பு, விவசாயிகளுக்காக குரல் கொடுப்பேனென்றவர், இப்போதோ எதையும் கண்டு கொள்ளாமல் கெத்தாகத் திரிகிறார்'' என்று குமுறுகிறார்கள்.

அதேபோல் நாகர்கோவில் தொகுதியில் ஒன்றிரண்டு மீனவ கிராமங்கள்தான் உண்டு. அதில் அழிக்கால் பகுதியில் ஆண்டுதோறும் ஜூன், ஜூலை மாதம் கடல் சீற்றம் ஏற்பட்டு சேதத்தை ஏற்படுத்தும். எம்.எல்.ஏ. ஆகும் முன்பெல்லாம் வந்து பார்த்து, தூண்டில் வளைவு அமைக்க வேண்டுமென்று அரசுக்கு வேண்டுகோள் விடுத்த காந்தி, எம்.எல்.ஏ. ஆனபிறகு புயலடித்தாலும் வருவதில்லை. கடந்த எம்.பி. தேர்தலின்போது ஓட்டுக் கேட்டு வந்தவரிடம் தூண்டில் வளைவு அமைக்கக் கேட்டோம். மோடி மீண்டும் வரட்டும், பார்க்கலாம்னு சொல்லிட்டு போனபின் அவரையே பார்க்க முடியவில்லை. அதேபோல் 4 ஆண்டுகளாக ஒழுகினசேரியிலுள்ள எம்.எல்.ஏ. அலுவலகமும் திறக்காமல் பூட்டியேதான் கிடக்கிறது. அந்த அலுவலகத்திலிருந்து மக்களை சந்தித்தவர்கள் யாரும் இரண்டாவது முறையாக எம்.எல்.ஏ. ஆனதில்லையாம். அதனால திறக்கவில்லையாம்" என்றனர்.

இப்படி தொகுதியில் எம்.ஆர்.காந்திக்கு எங்கு பார்த்தாலும் அதிருப்தி நிலவும் நிலையில் மீண்டும் சீட்டுக்காகக் காய்களை நகர்த்திவரும் அவருக்கு எதிராகக் கட்சிக்குள்ளேயே உள்ளடி வேலையில் சீனியர்கள் ஈடுபட்டு வருவது எம்.ஆர்.காந்தியின் ஆதரவாளர்களுக்கு



பொன். ராதாகிருஷ்ணன்
தமிழிசை சௌந்தர்ராஜன்
மீனாதேவ்
எம்.ஆர்.காந்தி


## வார்த்தைகள் எப்போது மௌனமாக மாறுகிறதோ அன்றே பழக்கவழக்கங்கள் வந்துவிட்டது என்று அர்த்தம்!

அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து பா.ஜ.க. முன்னாள் மாவட்ட தலைவர் ஒருவர் கூறுகையில், ‘‘எம்.ஆர்.காந்தி ஜனசங்கத்திலிருந்தே படிப்படியாக வந்தவர் என்பதால் ஆர்.எஸ்.எஸ். மூத்த தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர். அதனால்தான் 2021-ல் கடைசிக் கட்டத்தில் அவருக்கு சீட் கொடுக்கப்பட்டது. தற்போது 80 வயதாகிவிட்டதால் மீண்டும் அவருக்கு சீட் கொடுப்பதற்கு கட்சியில் கடுமையான எதிர்ப்பு உள்ளது. இதனால் இந்த வாய்ப்பை பொன்.ராதாகிருஷ்ணன் பயன்படுத்திக்கொள்ள காய்களை நகர்த்திவருகிறார். ஏற்கெனவே பொன்னாருக்கும், காந்திக்கும் ஆகாது. இருவருடைய ஆதரவாளர்களும் தனித்தனி கோஷ்டியாகத்தான் செயல்பட்டு வருகிறார்கள். கட்சி நிகழ்ச்சி போஸ்டர்களில் கூட மாறி மாறி... பெயரோ, புகைப்படமோ போடுவது கிடையாது. எம்.ஆர்.காந்தி, கட்சிக்காரர்கள் யார் போனாலும் எந்த உதவியும் செய்து கொடுப்பதில்லை என்றும், தி.மு.க.வினருடன்தான் நெருக்கமாக இருக்கிறார் என்றும் நயினார் நாகேந்திரன் தலைவரானதும் அவரை சந்தித்த பொன்னார் ஆதரவாளர்கள் குற்றம் சாட்டினார்கள்.

மேலும் 3 முறை நகர்மன்றத் தலைவராக இருந்த பொன்னாரின் ஆதரவாளரான மீனாதேவ், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் தேர்தலில் போட்டியிட்டபோது அவருக்கு எதிராகத்தான் எம்.ஆர்.காந்தி செயல்பட்டாரே தவிர, ஆதரவாக ஒரு நிமிடம்கூட செயல்படவில்லை என்ற வருத்தம் மீனாதேவுக்கும் அவருடைய ஆதரவாளர்களுக்கும் இன்றைக்கும் இருக்கத்தான் செய்கிறது" என்றார்.

எம்.ஆர்.காந்தி ஆதரவாளர் ஒருவர் கூறும்போது, “அமைப்புச் செயலாளர் கேசவவிநாயகமும், பொன்.ராதாகிருஷ்ணனும் சேர்ந்தே காந்தி அண்ணாச்சிக்கு எதிராகச் செயல்படுகிறார்கள். இவர்களுக்கு பச்சைக்கொடி காட்டும்விதமாக நயினார் நாகேந்திரனின் செயல்பாடு இருக்கிறது. சமீபத்தில் மாவட்ட நிர்வாகிகள் பட்டியலில், காந்தி அண்ணாச்சியின் ஆதரவாளர்களில் ஒருவர்கூட இல்லை. முழுக்க, முழுக்க



கேசவவிநாயகம்



நயினார் நாகேந்திரன்

பொன்.ராதாகிருஷ்ணன் மற்றும் கேசவவிநாயகத்தின் ஆதரவாளர்கள்தான் இருக்கிறார்கள்.

வரும் தேர்தலில் நாகர்கோவில் சீட் எனக்குத்தான். அ.தி.மு.க. -பா.ஜ.க. கூட்டணி ஆட்சிதான் நடக்கப் போகுது. அதில் நான் கண்டிப்பாக மந்திரியாவேன் எனக் கூறிவரும் பொன். ராதாகிருஷ்ணன், இதற்காகத் தற்போது கேசவவிநாயகத்துடன் நிழலாக நடக்க ஆரம்பித்திருக்கிறார். ஆனால் பா.ஜ.க.வின் தேசிய தலைமை, காந்தி அண்ணாச்சிக்கு மீண்டும் உறுதி கொடுத்திருப்பதுடன், ஒரு வேளை நாகர்கோவில் இல்லையென்றால் 1984-ல் 300 ஓட்டுக்களில் வெற்றி வாய்ப்பை இழந்த குளச்சல் தொகுதியில் சீட் வாங்கி காந்தி அண்ணாச்சி மீண்டும் எம்.எல்.ஏ. ஆவது உறுதிதான்” என்று நம்பிக்கையோடு கூறினார்.

இந்த நிலையில், நாகர்கோவில் மாநகராட்சி பா.ஜ.க. கவுன்சிலர் ஒருவர் கூறும்போது, “பொன்.ராதாகிருஷ்ணன் ஏற்கெனவே 11 முறை தேர்தலில் போட்டியிட்டுள்ளார். 2011-ல் நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு 3-ம் இடத்துக்கு தள்ளப்பட்டார். எனவே பொன்.ராதாகிருஷ்ணனுக்கு இனி வாய்ப்பு கிடைக்கப்போவதில்லை. அதனால் அவர் முயற்சி செய்வது தனது தீவிர ஆதரவாளரும் உறவுக்காரருமான கவுன்சிலர் மீனா தேவ்க்குத்தான்” என்றார்.

வரும் தேர்தலில் இங்கு ஏற்கெனவே போட்டியிட்டவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு கொடுக்கும் மனநிலையில் கட்சித் தலைமை இல்லாததால், முன்னாள் மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்திரராஜன் நாகர்கோவிலுக்கு ஆசைப்படுகிறாராம். கன்னியாகுமரி அருகே அகஸ்தீஸ்வரம் அவருடைய சொந்த ஊர் என்பதால், அதற்காக தலைமையிடம் பேசி வருகிறார். அதுபோல் மாநகராட்சி மண்டலத் தலைவராக இருக்கும் முத்துராமன், மகளிரணித் தலைவி உமாரதி போன்றோரும் கையில் தாமரையோடு காத்திருக்கிறார்கள். ஆகவே பா.ஜ.க.வின் நாகர்கோவில் சிட்டிங் தொகுதி மக்கள் அதிருப்தி, உட்கட்சி உள்ளடி, போட்டி எனத் தள்ளாடிக்கொண்டிருக்கிறது.

**-மணிகண்டன்**



ஜிங்கா கோல்டு™
GMP
GOOD MANUFACTURING PRACTICE
CONSISTENT QUALITY
CERTIFIED
ISO
9001:2008
COMPANY
Jinga Gold™
IT ONLY TAKES ONE
4 CAPSULES
Jinga Gold™
IT ONLY TAKES ONE
4 CAPSULES
4 கேப்சூல்ஸ்
ரூ.600/-
மட்டுமே
ஒன்னு போதும்
நின்னு பேசும் !
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில்
Apollo PHARMACY
MedPlus
அப்பலோ, மெட்ப்ளஸ்
உட்பட அனைத்து மருந்து
கடைகளிலும் கிடைக்கும்
SUPER STOCKIST
SRUTI'S
மாவட்ட வாரியான உதவிக்கு
90036 40742
ஹெல்ப் லைன்
9962 66 4444
For Personal Delivery
9962 808090


Advt



ஸ்ரீநிதி ஷெட்டி

## பலத்த யோசனை!

'வீர தீர சூரன்' படத்தை தொடர்ந்து ரஜினிக்கு கதை கூறி அவரின் பதிலுக்காக காத்திருந்தார் இயக்குநர் எஸ்.யு.அருண்குமார். ஆனால் ரஜினியிடமிருந்து எந்த சிக்னலும் வராததால் அடுத்து கமல் பக்கம் போன அவர், தனது அடுத்த படக் கதையை சொல்லியுள்ளார். அதைக் கேட்ட கமல், நடிக்கவில்லை எனச் சொன்னவர், தயாரிக்கிறேன் எனக் கூறியுள்ளார். இதனை கேட்டு உற்சாகமடைந்த அருண்குமார், அதே எனர்ஜியோடு நாயகன் வேட்டையை ஆரம்பித்தார். அவருடைய சாய்ஸ் இரண்டு ஹீரோவாக இருந்துள்ளது. முதலில் சூர்யா அடுத்து விஜய் சேதுபதி. ஆனால் சூர்யாவிற்கு முன் விஜய் சேதுபதி தனது நெருங்கிய வட்டாரம் மற்றும் ஆஸ்தான நடிகர் என்பதால் அவரை சந்தித்து கதை கூறியுள்ளார். அவரும் நண்பர் கதை என ஓ.கே. சொல்லியுள்ளார். மேலும் கதையும் பிடித்திருந்ததால் நிச்சயம் நடிப்பதாக வாக்குறுதி கொடுத்துள்ளார். இதனால் விஜய் சேதுபதியையே லாக் செய்துவிடலாமா இல்லை சூர்யாவை சந்தித்த பிறகு முடிவு எடுக்கலாமா என்ற யோசனையில் இயக்குநர் அருண்குமார் இருக்கிறார்.



## புது திட்டம்!

நடிகர் அஜித், இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரனுக்கு ஒரு ஆஃபர் கொடுத்துள்ளார். 'குட் பேட் அக்லி' படத்தை தொடர்ந்து, மீண்டும் அவருக்கு அடுத்த பட வாய்ப்பை கொடுத்த அஜித், கார் ரேஸ் இருப்பதால் படப்பிடிப்பிற்கான கால்ஷீட்டை நவம்பரில் தருவதாக கூறியுள்ளார். முதற்கட்டமாக நாயகி ரோலுக்கு கே.ஜி.எஃப் நடிகை ஸ்ரீநிதி ஷெட்டியிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். பட ரிலீஸை அடுத்த ஆண்டு ஏப்ரலுக்கு முடிவுசெய்துள்ளார். அஜித்தும் அதையே விரும்புகிறார். காரணம் 'குட் பேட் அக்லி'யும் ஏப்ரல் மாதம் வெளியானதால், அந்த சென்டிமெண்ட் இதிலும் தொடரும் என அவர் நம்புகிறார். அதோடு குட் பேட் அக்லி படம் பெருவாரியான அஜித் ரசிகர்களுக்கு மட்டுமே பிடித்த நிலையில் இந்த படத்தை அஜித் ரசிகர்கள் உட்பட மற்ற சினிமா ரசிகர்களையும் கவரும் வகையில் உருவாக்கத் திட்டம் தீட்டி வருகிறார்.

# ரீரிங் டாக்கஸ்



## ரூட்ட மாத்து!

இயக்குநராக அறிமுகமாகியிருந்தாலும் ‘லவ் டுடே’ மற்றும் ‘டிராகன்’ பட வெற்றியால் 2கே கிட்ஸுகளின் விருப்ப நாயகனாக மாறிப்போனார் பிரதீப் ரங்கநாதன். இதை விட்டுவிடக்கூடாது என நினைத்த அவர், இயக்கம் ஏரியாவை ஓரங்கட்டிவிட்டு நடிப்பு ஏரியாவை தொடர்ந்தார். இப்போது ‘டியூட்’ என்ற படத்தில் நடித்துவரும் அவர், அடுத்து டிராகன் பட இயக்குநர் அஷ்வத் மாரிமுத்து இயக்கத்தில் ஒரு படம் நடிக்க ஓ.கே. சொல்லியுள்ளார். ஆனால் இப்போது திடீரென்று மீண்டும் இயக்கம் பக்கம் தனது ரூட்டை திருப்பியுள்ளார். லவ் டுடே போல் இப்படத்தை இயக்குவது மட்டுமல்லாமல் நடிக்கவும் செய்கிறார். இப்படத்தை அவரது விருப்ப தயாரிப்பு நிறுவனமான ஏ.ஜி.எஸ். நிறுவனம் தயாரிக்கிறது. சயின்ஸ் பிக்ஷன் ஜானரில் படம் உருவாகிறது. விரைவில் முதற்கட்டப் பணிகள் தொடங்கவுள்ளது. இதை முடித்துவிட்டுத்தான் மீண்டும் மற்ற இயக்குநர்கள் இயக்கத்தில் நடிக்க முடிவெடுத்துள்ளார்.



## நகைச்சுவை விருந்து!

பி.டி.ஜி. யுனிவர்சல் தயாரிப்பில் வைபவ், அதுல்யா ரவி உள்ளிட்ட பலரது நடிப்பில் உருவாகியுள்ள படம் ‘சென்னை சிட்டி கேங்ஸ்டர்ஸ்.’ விக்ரம் ராஜேஷ்வர் மற்றும் அருண் கேசவ் இயக்கியுள்ள இப்படத்தில் மணிகண்டா ராஜேஷ், ஆனந்த்ராஜ், இளவரசு, ஜான் விஜய், ரெடின் கிங்ஸ்லி, மொட்டை ராஜேந்திரன் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். டி.இமான் இசையமைத்துள்ள இப்படம் வரும் 20-ஆம் தேதி வெளியாகவுள்ளது. இப்படத்தின் மூலம் சிறிது இடைவெளிக்குப் பிறகு ரீ எண்ட்ரி கொடுக்கிறார் அதுல்யா ரவி.

படம் குறித்து பேசிய அவர், ‘‘படப்பிடிப்பு நடக்கும்போதே இப்படம் கலகலப்பாக உருவாகியது. அதேபோல படம் முழுவதும் நகைச்சுவையாக இருக்கும்’’ என்கிறார். நாயகன் வைபவும் அதையே சொல்கிறார். ஆரம்பம் முதல் இறுதி வரை நகைச்சுவை விருந்தாக இருக்கும் என்கிறார்.

**-கவிதாசன் ஜெ.**



குறுகிய விவசாய வழி

# விவசாயத்துக்கு வழியில்லை! வேதனையில் விவசாயிகள்!

ஏழை எளிய மக்கள் பல ஆண்டுகளாக வசிக்கும் இடத்திற்கு பட்டா கேட்டு மனு கொடுத்தால், அதிகாரிகள் அவர்களை அலைய விடுவதுதான் தொடர் கதையாகி வருகிறது. அதே நேரத்தில் பரம்பரை நிலம், வீடு வைத்துள்ளவர்களுக்கு அரசுப் பதிவேட்டில் ஒன்றிய நெடுஞ்சாலை எனவுள்ள இடத்தையும், விவசாய நிலத்திற்கு செல்லும் வழியையும் சேர்த்து பட்டா வழங்கியதால் 50 ஏக்கருக்கு மேல் விவசாய நிலங்கள் கரம்பாக மாறுவதைப் பார்த்து விவசாயிகள் வேதனையடைந்து வருகிறார்கள்.

இதுகுறித்து மயிலாடுதுறை மாவட்டம் வடரங்கம் கிராமத்தைச் சேர்ந்த அருணம்பிள்ளை என்ற விவசாயி, "எங்களுக்கு 15 ஏக்கருக்கு மேல் நிலம் உள்ளது. அதேபோல் விவசாயிகள் மூர்த்தி, புகழேந்தி, பாண்டி, அஞ்சாதநெஞ்சன், ஐயப்பன், துரைமுருகன் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்டவர்களுக்கும் மொத்தமாக 50 ஏக்கருக்கு மேல் விளை நிலம் உள்ளது. இவர்கள் அனைவரும் சிறு குறு விவசாயிகள். இந்த நிலங்களுக்கு வடரங்கம் மெயின் ரோட்டின் ஓரமாக ஒன்றிய நெடுஞ்சாலை எனவுள்ள இடத்தில், அப்பா, தாத்தா காலத்திலிருந்து மாட்டு வண்டிப்பாதை இருந்தது. விவசாயத்துக்கு இவ்வழியைத்தான் பயன்படுத்தினார்கள். ஆனால் கடந்த 10 ஆண்டுகளுக்குமுன் இங்கு பணியாற்றிய வி.ஏ.ஓ., ஆர்.ஐ., வட்டாட்சியர் உள்ளிட்டவர்கள் கூட்டு சேர்ந்து நெடுஞ்சாலை என்றிருந்த இந்த இடத்தில் உள்நோக்கத்தோடு பட்டா வழங்கிவிட்டனர்.

பட்டா காரணமாக 12 அடி விவசாய சாலை 3 அடியாக சுருங்கிவிட்டது. விவசாயப் பணிகளுக்கான இயந்திரங்களை கொண்டுசெல்ல முடியவில்லை. இடுபொருட்களை எடுத்துச் செல்வதும் சிரமமாக உள்ளது. பட்டா வாங்கியவர்களுக்கு இதே கிராமத்தில் பூர்வீக நிலம், வீடுகள் உள்ளது. அதேவேளை, இதே கிராமத்தில் இடமில்லாத ஏழைகளுக்கு பட்டா வழங்கவில்லை. ஒன்றிய சாலை என்றுள்ள இடத்தில் பட்டா வழங்கக் கூடாதென்ற விதி உள்ளது. ஆனால் சில அதிகாரிகள் ஆதாயத்திற்காக வழியை சேர்த்து பட்டா வழங்கியதால் விவசாயம் செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளோம். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களுக்கான சாலையை மீட்டுத்தர வேண்டும் என சீர்காழி வட்டாட்சியர், கோட்டாட்சியர், முதல்வரின் தனிப்பிரிவுக்கு மனு அளித்தும் எந்த நடவடிக்கையும் இல்லை. மன வேதனையோடு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தேன். ஆவணங்களைப் பார்த்த நீதிபதி, விவசாய



நீர்வழியை ஆக்கிரமித்து கார், வேன்



அஞ்சாதநெஞ்சன்



அருணம்பிள்ளை



கஜேந்திரன்

நிலத்திற்கு செல்ல ஏற்கெனவே இருந்த வழியை மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்க சீர்காழி கோட்டாட்சியருக்கு கடந்த ஆண்டு ஜூலை 25ஆம் தேதி உத்தரவிட்டார். ஆனால் உரிய நடவடிக்கை எடுக்காமல், கோட்டாட்சியர் உத்தரவில் வட்டாட்சியர் கடந்த ஆண்டு அக்டோபர் 15ஆம் தேதி, ஒன்றிய சாலையை நத்தம் என மாற்றி ஆன்லைன் பட்டாவாக மாற்றியுள்ளனர். இதனால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர உள்ளேன்" என்கிறார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் வட்டச் செயலாளர் கஜேந்திரன், "கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு இந்த வயல்களுக்கு மாட்டு வண்டி செல்லும் பாதை இருந்தது. அப்பகுதியிலுள்ள அருந்ததியர் சமூக மக்களின் சுடுகாட்டுக்கும் இவ்வழியாகத்தான் செல்வார்கள். இப்படி இருந்த வழி, தற்போது சில அதிகாரிகள் செய்த தவறால் குறுகிவிட்டது. இப்பகுதியில் 50 ஏக்கருக்கு மேல் விளைநிலங்கள் பாதிக்கப்படுவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

வடரங்கம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி அஞ்சாதநெஞ்சன், "இந்த பகுதியிலுள்ள வயல்களுக்கு செல்லமுடியாத வகையில் வழியை ஆக்கிரமித்துள்ளனர். இதனால் சம்பா, குறுவை சாகுபடி செய்ய முடியாமல் தற்போது 50 ஏக்கருக்கு மேல் விளைநிலங்கள் கரம்பாகக் கிடக்கிறது. அது மட்டுமல்லாமல் நீர் வழியை ஆக்கிரமித்து கார், சரக்கு வாகனங்களை நிறுத்தியுள்ளனர். அவற்றை அகற்றி, சாலை வசதி ஏற்படுத்தி கொடுத்தாலே போதுமானதாக இருக்கும்" என்கிறார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்ளிடம் ஒன்றிய செயலாளர் கேசவன், "இதே ஒன்றிய பகுதிக்குட்பட்ட ஆச்சாள்புரம் கிராமத்தில் அடித்தட்டு ஏழை மக்களுக்கு பட்டா கேட்டால் ஒன்றிய சாலை என பட்டா வழங்க மறுக்கிறார்கள். ஆனால் இங்கு ஒன்றிய சாலையில் பட்டா வழங்கியுள்ளனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கண்டித்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்" எனக் கூறினார்.

சீர்காழி கோட்டாட்சியர் சுரேஷை நேரில் சந்தித்து பேசினோம். இதுகுறித்து வட்டாட்சியரிடம் கூறி நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியுள்ளதாகக் கூறினார். வட்டாட்சியர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றதும், சம்பந்தப்பட்ட வி.ஏ.ஓ.வை தொடர்புகொண்டவர், "இதுகுறித்து என்ன நிலைமை என்று அறிக்கையை உடனே கொடுங்கள்" என உத்தரவிட்டு, வி.ஏ.ஓ.விடம் விளக்கத்தை அனுப்புங்கள் என்று முடித்துக்கொண்டார்.

வி.ஏ.ஓ. பதிவேடு ஆவணத்தை பார்த்துவிட்டு, "ஒன்றிய சாலை என்றுதான் உள்ளது. எப்படி பட்டா கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. தற்போது உள்ள நிலையை அதிகாரிகளுக்கு தெரிவித்து விடுகிறேன்" என்றார். விவசாயிகளின் வேதனை தீருமா?

**–காளிதாஸ்**

நம்மை ஏமாற்றுபவனுக்குத் தெரியாது...
நாளை நாம் ஏமாற்றப்படுவோம் என்று!

# காவல் நிலைய வேட்டை!

சேலம் மாவட்டம் சங்ககிரி சப்-டிவிஷனுக்கு உட்பட்ட கொங்கணாபுரம் காவல்நிலையத்தில் இன்ஸ்பெக்டராக பணியாற்றிவருபவர் தனலட்சுமி. இதே காவல்நிலையத்தில் விக்னேஷ்வரமூர்த்தி, செந்தில்குமரன், எஸ்.எஸ்.ஐ. மயில் கணேசன் ஆகியோர் இன்ஸ்பெக்டருடன் கூட்டு சேர்ந்துகொண்டு பட்டியல் போட்டு வசூல் வேட்டையில் ஈடுபட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் ஒரு தகவல் வைரலானது.

இதுகுறித்து கள விசாரணையில் இறங்கினோம்.

"கொங்கணாபுரம் அருகேயுள்ள தங்காயூரைச் சேர்ந்தவர் சொக்கலிங்கம். இவருக்குச் சொந்தமான விவசாய நிலத்தை, உள்ளூரைச் சேர்ந்த தி.மு.க., அ.தி.மு.க. பிரமுகர்கள் சிலர் போலி ஆவணங்கள் மூலம் அபகரித்துக்கொண்டனர். ஆனால் எதிர்த்தரப்பினரிடம் இன்ஸ்பெக்டர் தனலட்சுமி, எஸ்.ஐ. செந்தில்குமரன் ஆகியோர் 6 லட்சம் ரூபாய் வசூலித்துக்கொண்டு, சொக்கலிங்கத்தின் மீது 3 சாதி வன்கொடுமை வழக்குகளை பதிவுசெய்து முடக்கிப்போட்டுள்ளனர்.

கொங்கு வெள்ளாளக் கவுண்டர்கள், வன்னியர்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதி என்பதால் அவர்கள் மீது, பட்டியல் சமூகத்தினர் யாரையாவது தூண்டிவிட்டு, சாதி வன்கொடுமை புகார் கொடுக்க வைக்கின்றனர். வன்கொடுமை வழக்கு பாயாமலிருக்க ஒரு லட்சம்; ஜாமீன் பெறும்வரை கைதுசெய்யாமலிருக்க 50 ஆயிரம் என மாமூல் பட்டியல் போட்டுள்ளனர்.

கொங்கணாபுரம் காவல் எல்லைக்குள், சட்டவிரோதமாக 48 சந்துக்கடைகள் உள்ளன. சந்துக்கடைக்காரர்கள் மாதம் தலா 5000 கப்பம் கட்டுகின்றனர். தவிர, 9 டாஸ்மாக் கடைகளும், 6 பார்களும் உள்ளன. பார் உரிமையாளர்கள், டாஸ்மாக் கடைகளிடமிருந்து மாதம் தலா 10,000 ரூபாய் கறந்துவிடுகின்றனர். தவிர, இந்த லிமிட்டில் 115 பனைமரங்கள் உள்ளன. சீசன் காலத்தில் கள் வியாபாரிகளிடம் வாரம் 2,000 ரூபாய் கறாராக வசூலித்துவிடுவார்களாம்.

கரண்ட் பேப்பர்
களை விசா



ரித்து எப்.ஐ.ஆர். பதிவுசெய்ய ஒரு லட்சமும், சொத்து ஆவணங்கள் மாயமான புகார்கள்மீது நடவடிக்க எடுக்க 50,000 ரூபாயும் வசூலிக்கின்றனர். சமீபத்தில் ஒரு பஞ்சு குடோன் தீப்பற்றியெரிந்த சம்பவத்தில் சேதமதிப்பை அதிகப்படுத்தி வழக்குப்பதிவு செய்ய ஒரு லட்சம் கைமாறியிருக்கிறது.

இன்ஸ்பெக்டர் தனலட்சுமி நேரடியாக எங்கும் கைநீட்டுவதில்லை என்றும், எஸ்.ஐ.க்கள் விக்னேஷ்வரமூர்த்தி, செந்தில் குமரன், 'கரண்ட் பேப்பர்' மயில்கணேசன் ஆகியோர்தான் வசூல் ஏஜென்டுகள். கொங்கணாபுரம் காவல் நிலையம் அருகிலுள்ள டீக்கடையில்தான் எல்லா டீலிங்கும் நடக்கிறது'' என்கிறார்கள் கொங்கணாபுரம் காக்கிகளால் பாதிக்கப் பட்டவர்கள்.

கொங்கணாபுரம் காவல் நிலையத்தில் அரங்கேறிவரும் கூத்துகள் குறித்து மற்றொரு தரப்பினரும் விரிவாகச் சொன்னார்கள்...

"இந்த காவல் நிலையத்தில், ஆர்த்தி என்பவர் பயிற்சி பெண் எஸ்.ஐ.யாக பணியாற்றிவந்தார். கச்சுப்பள்ளியில் நடந்த சாதி மோதல் தொடர்பான ஒரு வழக்கை அவர் விசாரித்தார். சம்பவத்தின் அடிப் படையில் அந்த வழக்கில் கையால் தாக்கியது, ஆபாச வார்த்தைகளால் திட்டுதல் ஆகிய பிரிவுகளில்தான் வழக்குப்பதிவு செய்ய முடியும். ஆனால், ஒரு தரப்புக்கு ஆதரவாக, எதிர்த்தரப்பு மீது பிணையில் வரமுடி யாத பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யும்படி இன்ஸ்பெக்டர் அழுத்தம் கொடுத்தார். அதற்கு எஸ்.ஐ. ஆர்த்தி உடன்படாததால், இருவருக்கும் அங்கேயே முட்டிக்கொண்டது.

அபிமன்னன் என்பவருக்குச் சொந்த மான லாரி காணாமல்போனது. இந்த வழக்கை விசாரிக்க எஸ்.ஐ. ஆர்த்தி பணம்கேட்டு மிரட்டியதாக எஸ்.ஐ. செந்தில்குமரன், ஒரு புகாரை எழுதிக் கொடுத்து, அதில் கையெழுத்துப் போடும் படி அபிமன்னனுக்கு அழுத்தம் தந்தார். ஆனால் அவரோ, 'எனக்கு லாரியே கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. பொய்ப்புகார் தரமுடியாது,' என கழன்று கொண்டார். அதனால் ஆத்திரமடைந்த எஸ்.ஐ. செந்தில்குமரன், 'ஏன் நீயும், அந்த எஸ்.ஐ.யும் எங்கேயாவது ஜாலியாக ரூம் போடலாம்னு இருக்கீங்களா? ஏன் புகார் தரமறுக்கிறீர் கள்?' என நாராச மாகப் பேசினார்.


செந்தில்குமரன்


விக்னேஷ்வர மூர்த்தி


மயில் கணேசன்

இவரால் இன்ஸ்பெக்டர் தனலட்சுமி மற்றும் சிலருக்கு பல லட்சம் ரூபாய் வசூல் பாதிக்கப்பட்டது. அதனால் கடுப் பான இன்ஸ்., ஆர்த்தி எஸ்.ஐ. மீது எஸ்.பி.க்கு பொய் புகாரளித்தார். அதன்பேரில், எஸ்.ஐ. ஆர்த்தியிடம் விளக்கம்கேட்டு, எஸ்.பி. கவுதம் கோயல் 'மெமோ' வழங்கினார்" என கொங்கணாபுரம் காக்கிகளின் அட்ராசிட்டிகளை புட்டு புட்டு வைத்தனர் விவரமறிந்தவர்கள்.

இதுகுறித்து இன்ஸ்பெக்டர் தனலட்சுமியிடம் விளக்கம்கேட்டபோது, "எனக்கு ஒரு லட்சம் சம்பளம் வருகிறது. அதுவே போதும். நான் எதற்காக லஞ்சம் வாங்கவேண்டும்? எஸ்.ஐ., ஆர்த்திக்கு டூட்டி போடும்போது அந்த டூட்டி பார்க்கமாட்டேன்... இந்த டூட்டி பார்க்கமாட்டேன் என்றார். சார்... எனக்கு வேறு லைனில் அழைப்புகள் வந்துகிட்டே இருக்கு. அப்புறமா பேசுகிறேன்" என்றுகூறி பேச்சைத் துண்டித்தார்.

இன்ஸ்பெக்டர் தனலட்சுமி, கறைபடியாத கரங் களுக்குச் சொந்தக்காரர் என்பது போல பேசினாலும், துறைக்குள் அவரை 'வசூல் ராணி' என்றே சொல் கிறார்கள். அவர் வாழப்பாடி மகளிர் காவல் நிலையத்தில் பணியாற்றியபோது, மாமூல் கேட்ட புகாரின்பேரில், அவருக்கு இரண்டு ஊதிய உயர்வை ரத்துசெய்து உத்தரவிடப்பட்டு உள்ளதாகவும் கூறுகின்றனர்.

எஸ்.ஐ. ஆர்த்தியிடம் கேட்டபோது, "எனக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை ஒருபோதும் மறுத்ததில்லை. ஒருமுறை தொடர்ச்சியாக பணியாற்ற நேர்ந்ததால், ஓய்வுக்காக விடுப்பு கேட்டேன். விடுப்பு கிடைக்காததால் மனஉளைச்சல் ஏற்பட்டது. அதை வேறு மாதிரி திசை திருப்பிவிட்டனர்" என்றார் சுருக்கமாக.

வசூல் வேட்டை நடத்திவரும் கொங்கணாபுரம் போலீசார் மீது டி.ஜி.பி. நடவடிக்கை எடுப்பாரா? என்பதே பொதுமக்களின் கோரிக்கையாகும்.

**-இளையராஜா**

# கலைஞரின் கருணையே...!



பதினைந்து ஏக்கர் நிலத்தில் சுமார் இருபது கோடி மதிப்பில், தொழிலாளர்களுக்கு சொந்தமான ஸ்டுடியோ பையனூரில் இன்று கம்பீரமாக நடந்துவருவதற்குக் காரணம் கலைஞர் அவர்களே! கலையுலகுக்கு அளப்பரிய வளர்ச்சி திட்டங்களை வழங்கியவர் கலைஞர். ஆனாலும் பையனூர் கலைஞர் திரைப்பட நகரமே அவரின் கலைப்பயணத்தை... வரப்போகும் பல ஆண்டுகளுக்கு, அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச்செல்லும் அடையாளச் சின்னமாகும். பெப்சி அறக்கட்டளையின் சார்பாக, தொழிலாளர் ஸ்டுடியோ வளாகத்திற்குள் கலைஞர் மணிமண்டபம் ஒன்று கட்டப் பட்டு, அதற் குள் அவரின் கலையுலக சாதனைகள், படங்கள் அனைத் தும் பொதுமக்கள் பார்வைக்கு வைக் கப்படும். ஏற்கனவே கலைஞருக்கான நுழைவாயில் வளைவுகள் 'பெப்சி' தலைவர் செல்வமணியால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அந்த நுழைவாயி லில் வைப்பதற்காக கலைஞர் சிலையையும் செய்து வைத்துள்ளனர்.

## சினிமா கொட்டகை 98

மாண்புமிகு முதல்வரின் தேதி கிடைத்ததும் அது திறந்து வைக்கப்படும். மணிமண்டபத்துக்கான அடிக்கல்லும் நாட்டப்படும். இதில் நானும் பங்கேற்றேன் என்பதில் பெரும் உவகை ஏற்படுகிறது.

எம்.ஜி.ஆர்., ஏவி.எம்., ராமாநாயுடு -இந்த மூன்று பேரால் கலையுலகில் 30 வயதுக்குள்ளேயே பல உச்சங்களைத் தொட்டேன். அவர்களின் பொற்கரங்களால் ஆசிர்வதிக்கப்பட்ட நான்... பலபேரை திரையுலகில் அறிமுகப்படுத்தும் வாய்ப்பையும் பெற்றேன். பஞ்சு அருணாசலம், எஸ்.ஏ.சந்திரசேகர், செல்வபாரதி, எஸ்.பி.முத்துராமன், கே.பி.அஹமத், சந்திரபோஸ், இசைவாணன், ஆர்.டி.அண்ணாதுரை, ஜெயா, ஜெயசுதா, சுமித்ரா, ஹம்சவிருத்தன், ராஜலட்சுமி... இப்படி பட்டியலில் பலர் உண்டு.

‘கலைமாமணி’, ‘கலைச்செல்வம்’, ‘இனமான இயக்குநர்’, ‘எழுச்சி இயக்குநர்’, ‘குணக்கலைக்குன்று’ ‘வாழ்நாள் சாதனையாளர்’ விருது, சிறந்த கதாசிரியர், வசனகர்த்தா என ஏராளமான விருதுகள்.

‘ராஜபார்ட் ரங்கதுரை’, ‘மாங்குடி மைனர்’, ‘பெத்த மனம் பித்து’, ‘மைக்கேல்ராஜ்’, ‘கனிமுத்து பாப்பா’, ‘அட்ரா சக்கை... அட்ரா சக்கை’, ‘காசி யாத்திரை’, ‘முதலாளியம்மா’, ‘மைனர் மாப்பிள்ளை’ என நான் நல்ல படங்களையே தயாரித்தேன். பல மொழிகளில் கதைகள் கொடுத்திருக்கிறேன். பல வெற்றிப் படங்களை இயக்கியுள்ளேன். இன்று பல பிரபலங்கள் என்னை தவிர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். குறுக்கு வழியில் உச்சங்களைத் தொட்ட எச்சங்கள்... தங்களது பழைய வரலாறுகள் வெளியே தெரிந்துவிடும் என்கிற பயத்தில், என்னை ஓரங்கட்டுவதை நான் அறிவேன். இனியும் வேலை செய்துதான் நான் வாழவேண்டும் என்ற நிலை எனக்கில்லை. இருப்பினும் இந்த வளம்கெட்ட சிலருக்காக, நான் எழுதுவதையோ... திரையுலகப் பணிகளையோ விட்டு விலகுவதாகவோ இல்லை. புதியவர்களை அறிமுகப்படுத்துவதையும் நான் விடப்போவதில்லை.

சுரேஷ் புரொடக்ஷன்ஸ் முழுமையாக சென்னையில் இயங்கிக்கொண்டிருந்தபோது அந்த அலுவலகத்தில் பணியாற்றிய சாமிநாதனை எனக்குப் பிடிக்கும். சில ஆண்டுகள் கழித்து சாமிநாதன் வேலையில் நீடிக்க முடியவில்லை. வெளியே வந்ததும் என்னை பார்க்க வந்தார். என் அலுவலகத்தில் அவரை தங்க வைத்து, பின்னர் அவரை ஒரு படத்தின் தயாரிப்பு நிர்வாகியாக பணியாற்ற வைத்தேன். அதன்பின் தயாரிப்பு நிர்வாகிகள் சங்கத்தில் செயலாளர் பதவிக்கு வந்தார். பின்னர் பெப்சி செயலாளர் ஆனார். தற்போது நடந்த தயாரிப்பு நிர்வாகிகள் தேர்தலில் ஏழாவது முறையாக நிறைய வாக்குகள் பெற்று செயலாளர் ஆகியுள்ளார். அதேபோல் என்னோடு பணியாற்றிய பழனியப்பன், சென்னை பல்கலைக் கழகத்தில் ‘டாக்டர்’ பட்டம் பெற்றதோடு எடிட்டர்கள் யூனியன் செயலாளராகப் பணியாற்றுகிறார்.

ஒரு தெலுங்குப் பட ஷூட்டிங். மைசூர் தாண்டி மங்களூர் போகும் வழியில் மலைப் பிரதேசம். சிங்மங்களூரில் ஓட்டலில் தங்கியிருந்தோம். பகலெல்லாம் சரியான வேலை... ஹோட்டலுக்கு திரும்பியதும் வெந்நீர் போட்டு குளித்து, சாப்பிட்டுவிட்டு அறைக்குள் வந்து கதவைப் பூட்டிவிட்டு படுத்துவிட்டேன். ஏதோ சத்தம் கேட்டுக்கொண்டேயிருந்தது. திடுக்கிட்டு எழுந்து கவனித்தேன். ஒரு பெண் பேசுவதுபோல் இருந்தது. கதவு உள்ளே பூட்டியிருக்கு. குரல் உள்ளே கேட்கிறது. சந்தேகத்துடன் கட்டிலின் கீழே குனிந்து பார்த்தேன். என் படத்தில் தங்கையாக நடிக்கும் புதுமுகம்... தூக்கத்தில் பேசும் பழக்கமாம். எழுப்பி ‘‘இங்கே வந்து ஏன் படுத்திருக்கே’’ன்னு கேட்டேன். ‘போதையில் இவரின் அறைக்கதவை சிலர் வந்து தட்டியதாகவும், அதனால் பயந்துபோய் என் அறைக்குள் வந்து ஒளிந்துகொண்டதாகவும், களைப்பாக இருந்ததால் தூங்கிவிட்டதாகவும் சொன்னார். நான் அவரை, அவரது அறைக்கு அழைத்துப் போய், குடித்துவிட்டு உணர்வேயில்லாமல் தூங்கிக்கொண்டிருந்த அவள் அண்ணனை எழுப்பி “தங்கைக்கு துணைக்கு வந்த நீங்க இப்படி நடந்தா... தங்கச்சிக்கு யார் பாது காப்பு?” என திட்டிவிட்டு வந்தேன்.


என் முதல் படத்திலிருந்து இன்றுவரை என்னோடு ஏற்றத்தாழ்வுகள் காட்டாமல், பாராமல்



டைரக்டர்-ரைட்டர்
**வி.சி. குகநாதன்**

**எதையும் யாரிடமும் எதிர்பார்க்காமல், வெற்றி –தோல்வி என்று மனம் சஞ்சலப் படாமல்... நடப்பது அனைத்தும் நன்மைக்கே என்று மகிழ்ச்சியுடன் வாழ்வோம்!**

பழகிவருபவர் கவிஞர் பூவை.செங்குட்டுவன். இவர் என்னோடு அன்பாக பழக ஆரம்பித்தது 1966ல். அதன்பின்னால் எனக்கு ஒரு எண்ணம் உதயமானது. 'எழுது' என்று சொல்லி எனக்கு காஞ்சியில் பேனா பரிசளித்தவர் பேரறிஞர் அண்ணா. ஒருவேளை நான் காஞ்சியில் படிக்க விரும்பாமல், சென்னையிலே படித்து எம்.ஜி.ஆரை சந்தித்திருந்தால், அவரிடம் 'எனக்கு நடிக்க வாய்ப்பு வாங்கித் தாருங்கள்' என்றுதான் கேட்டிருப்பேன். அப்படி நடந்திருந்தால் நான் இந்த வளர்ச்சியைக் கண்டிருக்க முடியாது. இவ்வளவு காலம் திரையுலகில் நீடித்திருக்க முடியாது. ஆகவே நான் அண்ணாவை மறக்கவும் முடியாது... ஏதோ ஒருவிதத்தில் நன்றி சொல்லியே ஆக வேண்டும். அதேபோல் என் இதய தெய்வம் எம்.ஜி. ஆரை உயிருள்ள வரை போற்றிக் கொண்டேயிருக்க வேண்டும். அதனால் மக்கள் விரும்புகின்றவிதமாக நீண்டகாலம் நிலைத்திருக்கும் ஒரு பாடலை, என் முதல் படத்திலேயே வைக்க வேண்டும் என முடிவெடுத்தேன் அதை கண்ணதாசனிடம் சொல்லி, எழுதி வாங்கும் அளவு நான் பிரபலமானவன் அல்ல. ஆகவே இந்தக் கருத்தை பூவையாரிடம் சொன்னேன், அவர் சம்மதித்தார். அப்பவே தேடலை ஆரம்பித்தோம்... பிறந்தது பாடல். இன்றுவரை பிரபலமாகயிருக்கும் எம்ஜிஆரின் 'நான் உங்கள் வீட்டுப் பிள்ளை, இது ஊரறிந்த உண்மை... நான் செல்லுகின்ற பாதை, பேரறிஞர் காட்டும் பாதை'.




பாடல் பிறந்ததும் கவிஞர் செங்குட்டுவனுக்கு ஒரு வாக்குறுதி கொடுத்தேன். நான் ஒரு தயாரிப்பாளர் ஆனால் என் படத்தின் எல்லா பாடல்களையும் உங்களை வைத்து எழுதுவேன். என்று. 'கனிமுத்து பாப்பா', 'பெத்த மனம் பித்து' போன்ற என் பல படங்களுக்கு முழுப் பாடல்களையும் அவரே எழுதினார். இன்றும் அவரது எந்த விழாவானாலும் நான் இல்லாமல் நடத்தமாட்டார். அதேபோல் எம்.ஜி.ஆருக்கு என் நன்றிக்கடனைக் காட்டும் நோக்குடன், 'மாங்குடி மைனர்' படத்தை எழுதி, இயக்கி, தயாரித்தேன். அந்தப் படத்திலும் ஒரு பாடலை வைக்க விரும்பி வாலி ஸாரை எழுதச் சொன்னேன். அதிலும் அண்ணா இருக்க வேண்டும் என்றேன். பாடல் பிறந்தது... 'அண்ணா நீங்க நெனச்சபடி நடந்திருக்கு... புரட்சித் தலைவர் கையில் நாடிருக்கு'... செம ஹிட்டான பாடல். முதல் பாடல் பூவையாரது 1967ல். இரண்டாவது பாடல் வாலி ஸாரது, 1977. இன்னும் ஒரு கடமை பாக்கியிருக்கிறது. காலம் கனியட்டும், என் காணிக்கை மூன்றாவது முறையாக வெளிவரும். அதுவும் இதய தெய்வம் எம்.ஜி.ஆருக்கானது. படத்தின் பெயர் எம்.ஜி.ஆர். இல்லம்.

எனக்கு மிகவும் பிடித்தவர்கள் பட்டியலில் அண்ணன் பழ.நெடுமாறனும், ஐயா வீரமணியும் முக்கியமானவர்கள். பல நல்ல விஷயங்களை, நான் இவர்களிடமிருந்து கற்றுக் கொண்டிருக்கிறேன். அண்ணன் பழ.நெடுமாறன், எனக்கு சில பதவிகளைத் தந்து அழகு பார்த்தவர். பல அரசியல் நிகழ்வுகளை, சில அரசியல் தலைவர்களைப் பற்றி எனக்குச் சொல்லித் தந்தவர். டெல்லிக்கு அழைத்துப்போய் பிரதமர், பிற அமைச்சர்களோடு இலங்கை பிரச்சினை பற்றி பேச வைத்தவர். மதுரையில் நடந்த பல ஈழப் போராட்டங்களில் என்னை பேச வைத்தவர். தன் சொந்த தம்பிபோல் என் மீது பாசம் காட்டுபவர். எனக்கு 'எழுச்சி இயக்குனர்' என்ற பட்டத்தை தந்தவர் இவர்தான்.

அய்யா வீரமணி, திடலில் பல கூட்டங்களில் என்னை பேசவைத்து அழகு பார்த்தவர். ஈழப் போராட்டத்துக்கு முழு ஆதரவு கொடுத்து பலமுனையில் உதவியவர். திருச்சி கழக மாநாட்டில், போராளிகளின் படங்களைத் திறக்க வாய்ப்பளித்தவர். எழுச்சிப் பயணத்தில் நம்மோடு கன்னியாகுமரி வரை வந்தவர். எங்கள் மனிதச் சங்கிலி போராட்டத்தில் தானும் கலந்து, கழகத்தையும் கலந்துகொள்ள வைத்து 'மனிதச் சங்கிலி' வலுப்பெறவும், வெற்றியடையவும் முழு ஒத்துழைப்பு நல்கியவர். திடலில் எனக்கு 'இனமான இயக்குநர்' என்ற சிறப்பு பட்டத்தை தந்து பாராட்டியவர். எப்போதும் ஒரே மாதிரி பழகும் சிறப்பான தன்மையுடையவர்.

**(திரை விரியும்...)**

படம் உதவி: ஞானம்

www.nakkheeran.in










# சிதறிய விமானம்... சிதைந்த கனவுகள்!

## -பயணிகளின் சோகக்கதை!

இந்தியாவில் நடந்த விமான விபத்துகளிலேயே மிகமோசமான விபத்து என்ற பெயரைப் பெற்றிருக்கிறது, ஜூன் 12-ஆம் தேதி அகமதாபாத்தில் நடந்த விமான விபத்து. குஜராத் மாநிலம் அகமதாபாத் சர்தார் வல்லபபாய் படேல் சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஜூன் 12-ஆம் தேதி லண்டனுக்கு புறப்பட்ட போயிங் 787-8 ட்ரீம்லைனர் விமானத்தில் பயணம் செய்த 230 பயணிகள், 10 விமானப் பணியாளர்கள், 2 விமானிகள், தங்களது இறுதி யாத்திரைக்குக் கிளம்பிக்கொண்டிருக்கிறோம் என்பதை அறியவில்லை. மதியம் 1.39-க்குப் புறப்பட்ட அந்த விமானம், அடுத்த இரண்டு நிமிடத்தில் விமானத்தின் இரு என்ஜின்களும் இயங்காததன் காரணமாக, தனியார் மருத்துவக் கல்லூரி விடுதியொன்றின் கட்டடத்தில் மோதி வெடித்துச் சிதறியது. விமானத்தின் எரிபொருள் டேங்க் முழுக்க நிரப்பப்பட்டிருந்ததால் பெரும் தீயுடன் கரும்புகை கிளம்பியது. இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த ரமேஷ் விஸ்வாஸ்குமார் என்ற ஒரேயொரு பயணியைத் தவிர...

கல்லூரி வளாகத்தில் சிதறிய விமான பாகம்





சிதைந்த கல்லூரி விடுதி உணவுக்கூடம்

www.nakkheeran.in







அனைவரும் உயிரிழந்துவிட்டனர். விமானம் தனியார் மருத்துவக் கல்லூரி விடுதியொன்றில் மோதியதால், விடுதியில் மதிய நேரம் சாப்பிட்டுக் கொண்டிருந்த அக்கல்லூரியின் 50 மாணவர்கள் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். 10 பேர் உயிரிழந்திருக்கின்றனர். இதுதவிர மருத்துவர்கள், கல்லூரிப் பணியாளர்கள், மெஹ்னானி நகர்வாசிகள் 23 பேர் உயிரிழந்திருக்கின்றனர். இதனால் இறந்தவர்கள் எண்ணிக்கை 274 ஆக உயர்ந்துள்ளது.

### விஜய்ரூபானி -குஜராத் முன்னாள் முதல்வர்

விமான விபத்து ஏற்பட்டதும்... அந்த விமானத்தில் ரூபானி லண்டன் கிளம்பினார் என்றொரு தகவல் கிளம்பியது. அதேசமயம், இல்லை ரூபானி அந்த விமானத்தில் பயணிக்கவில்லை, மற்றொரு விமானத்தில்தான் பயணிக்கிறார் என பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்கள் மறுப்புத் தெரிவித்தனர். இந்நிலையில் விபத்துக்குள்ளான விமானத்தில் பயணித்தவர்களின் பட்டியல் வெளியாக, அதில் விஜய் ரூபானி பெயரும் இடம்பெற்றிருப்பது வெளியானது. சிறிது நேரத்துக்குப்பின் விஜய் ரூபானி படுகாயங்களுடன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டிருப்பதாக அடுத்தகட்ட தகவல் வெளியானது. சற்றுநேரத்தில் அவர் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டது.


பலியான விஜய் ரூபானி

விஜய்ரூபானி, லண்டனில் தனது மகள் வீட்டிலிருக்கும் மனைவி அஞ்சலி ரூபானியை அழைத்துவர கிளம்பியிருக்கிறார். ஆனால் அதற்குமுன் காலன் அவரை அழைத்துக்கொண்டான்.

ராஜ்கோட் மேயராக வெற்றிபெற்றதன் மூலம் குஜராத் அரசியலில் கவனம் ஈர்த்தவர் விஜய் ரூபானி. பின் 2006-ல் ராஜ்யசபா எம்.பி., 2016-ல் குஜராத் பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர், குஜராத் போக்குவரத்துத்துறை அமைச்சர், 2016-ல் குஜராத் முதல்வர் என அவரது கிராப் உயர்ந்தபடியே சென்றது.

அதேசமயம் சர்ச்சைகளும் அவர் மீது உண்டு. குஜராத் முதல்வர் விஜய்ரூபானியின் நிறுவனம், பங்குச் சந்தையில் செய்த முறைகேடுகளுக்காக செக்யூரிட்டிஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா, ரூ 15 லட்சம் அபராதம் விதித்தது. கொரோனா காலகட்டத்தில், கொரோனாவை சரிவரக் கையாளாதது, கொரோனாவுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் காண்பித்தது போன்றவை அவரது பெயரைப் பாதித்தன.

### பிரதிக்ஜோஷி குடும்பம்

இந்த விமான விபத்தில் பலியான ஒரு குடும்பத்தினரின் செல்பி படம்தான் காண்போரின் மனதை கனக்கச் செய்வதாக உள்ளது. ராஜஸ்தான் மாநிலத்தின் ராபனஸ்வாரா பகுதியைச் சேர்ந்த மென்பொருள் நிபுணரான பிரதிக்ஜோஷி, கடந்த ஆறு வருடங்களாக லண்டனில் ஐ.டி. நிறுவனத்தில் பணியாற்றிவந்தார். அவரது மனைவி கோமி வியாஸ், ராஜஸ்தானில் மருத்துவராகப் பணியாற்றி வருகிறார். இவர்களுக்கு மகள் மிராயா, இரட்டை குழந்தைகளான மகன்கள் நகுல், பிரத்யுத் ஆகியோர் உள்ளனர். பிரதிக்ஜோஷி, அவ்வப்போது இந்தியாவுக்கு வந்து தனது குடும்பத்தினரோடு சிறிது நாட்கள் தங்கிச்செல்வது வழக்கம். இப்படி பிரிந்து வாழ்வதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக, அனைவரும் குடும்பத்தோடு லண்டனில் குடியேறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, அதற்கானடாகுமெண்ட் வேலைகளையும் வெற்றிகரமாக முடித்து, தனது குடும்பத்தை லண்டனுக்கு அழைத்துச்செல்லும் குதூகலத்தோடு இந்தியா வந்திருந்தார். அவரது மனைவியும் தனது மருத்துவர் பணியை ராஜினாமா செய்துவிட்டு கணவரோடு லண்டனுக்கு கிளம்பினார். ஏர் இந்தியா விமானத்தில் ஏறியதுமே மகிழ்ச்சியோடு ஒரு செல்பியை எடுத்து தங்கள் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அனுப்பிவைத்தனர். இவ்விபத்தில் அனைவரும் பலியான நிலையில், இந்த செல்பி வைரலாகி அனைவரையும் கலங்கடித்துவருகிறது.

### ஏர்ஹோஸ்டஸ் நந்தோய் சர்மா, லனுந்தெம் சிங்சன்

விபத்துக்குள்ளான ஏர் இந்தியா விமானத்தில், மணிப்பூரின் தௌபல் மாவட்டத்தைச் சேர்ந்த நந்தோய் சர்மா என்ற 20 வயது விமானப் பணிப்பெண்ணும் பலியானார். நந்தோய் சர்மா கல்லூரியின் இறுதியாண்டு படிக்கும்போதே ஏர் இந்தியா விமானத்தில் பணிப்பெண் தேர்வுக்கு விண்ணப்பித்திருக்கிறார். கிடைத்தால் அதிர்ஷ்டம் என்றிருந்தவருக்கு முதல் முயற்சியிலேயே வேலை

www.nakkheeran.in

கிடைத்ததால் மிகுந்த மகிழ்ச்சியடைந்திருக்கிறார். இந்த பணியில் சேர்ந்து மூன்றாண்டு ஆகும் சூழலில், தற்போது விபத்தில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நந்தோய் சர்மா பலியானதை மணிப்பூர் முன்னாள் முதல்வரான பைரோன் சிங் தனது எக்ஸ் தளத்தில் உறுதிசெய்துள்ளார். அதைக்கண்டு குடும்பத்தினர் துடிதுடித்துள்ளனர். அப்பெண்ணின் சகோதரியிடம், இன்னும் இரண்டு நாட்களில் திரும்பி வந்துவிடுவேனென்று சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார். மேலும், விமானத்தில் ஏறிய பின்னரும் சகோதரியோடு சாட் செய்திருக்கிறார். 'நான் லண்டனுக்குச் செல்லவுள்ளேன். இன்னும் சில நிமிடங்களில் விமானம் கிளம்பவுள்ளது. அதன்பின் உன்னோடு சாட் செய்ய இயலாது' என்று குறிப்பிட்டிருக்கிறார். லண்டனுக்கு செல்வதாகச் சொல்லிவிட்டு இந்த உலகை விட்டே சென்றுவிட்டாளே என்று அவரது சகோதரி கதறியழுதது அனைவருக்கும் கண்ணீரை வரவழைப்பதாக இருந்தது.

மணிப்பூரின் காங்போக்பி மாவட்டத்தை சேர்ந்த லனுந்தெம் சிங்சன் என்ற 20 வயது பணிப்பெண்ணும் இந்த விபத்தில் உயிரிழந்தார். இவர் கடந்த 2024ஆம் ஆண்டில் தான் இந்த வேலையில் சேர்ந்திருந்தார். இவரது தந்தை சில ஆண்டுகளுக்குமுன் காலமானதால், இவரையும், மூன்று சகோதரர்களையும் இவரது தாய்தான் வளர்த்துவந்துள்ளார். ஒருநாள் முன்பாக பணிக்கு கிளம்பும்போது, "நான் அகமதாபாத்திலுள்ள அலுவலகத்துக்குச் செல்கிறேன்" என்று தாயிடம் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார். எப்படியாவது மகள் உயிருடன் திரும்பக்கிடைப்பார் என எதிர்பார்த்திருந்த தாய்க்கு அதிர்ச்சியே மிஞ்சியது.

## ரோஷினி ஷங்கரி

மகாராஷ்டிராவிலுள்ள தானே மாவட்டத்திலுள்ள டோம்பிவாலி நகரைச் சேர்ந்த ரோஷினி ஷங்கரி என்ற விமானப் பணிப்பெண்ணும் பலியானார். அவரது பெற்றோர் ராஜேந்திரா, ராஜஸ்ரீ, சகோதரர் விக்னேஷ். ரோஷினி விமானப் பணிப்பெண்ணாக மட்டுமல்லாது, இன்ஸ்டாகிராம்



பிரதிக் ஜோஷி குடும்பம் (கடைசி செல்பி)





ஏர்ஹோஸ்டஸ் ரோஷினி சங்கரி, நந்தோய் ஷர்மா

கதறும் நந்தோய் ஷர்மாவின் குடும்பம்





லனுந்தெம் சிங்சன்

பிரபலமாகவும் இருந்திருக்கிறார். இவரது பக்கத்தை 54,000 பேர் பின்தொடர்கிறார்கள். சமீபத்தில் அவரது பட்டமளிப்பு நாள் விழாவையொட்டி, ஏர் இந்தியா விமானத்தினுள் சக பணிப்பெண்களோடு சேர்ந்து மகிழ்ச்சியாக ஆடிப்பாடி ரீல்ஸ் வெளியிட்டிருக்கிறார்.

## ரஞ்சிதா கோபகுமாரன், செவிலி –கேரளம்

ரஞ்சிதா கோபகுமாரன் தனது செவிலியர் பணியை குஜராத்தில்தான் தொடங்கினார். அவரது முடிவும் குஜராத்திலேயே அமைந்திருக்கிறது. ரஞ்சிதாவுக்கு இந்துசூடன் என்ற மகனும், இதிகா என்ற மகளும் இருக்கிறார்கள். தாயார் துளசி. கணவர் கோபகுமாரன். தற்சமயம் வடக்கேகாவாலா என்ற ஊரில் வசித்து வருகிறார். நர்ஸிங் படிப்பு முடித்த அவர் குஜராத் மருத்துவமனையில்தான் முதன்முதலில் நர்ஸாக




# விபத்துக்கு என்ன காரணம்?


ஜான் பார்னெட்

பறவை மோதிவிட்டது, விமானத்தின் இரண்டு என்ஜின்களும் திடீரென இயங்கவில்லை, அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிக எடையிருந்தது என பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு வருகின்றன.

போயிங் ட்ரீம்லைனர் 787 விமானத்தின் பாதுகாப்பு குறித்து சமூக ஆர்வலர்கள் பல ஆண்டுகளாகவே சந்தேகம் எழுப்பிவந்திருக்கின்றனர். ஆனால் அந்த விமான நிறுவனத்தால் அது உதாசீனம் செய்யப்பட்டே வந்திருக்கிறது. போயிங் விமான தயாரிப்பு நிறுவனத்தில் 30 ஆண்டுகளாகப் பணியாற்றி வந்தவர் ஜான் பார்னெட். இவர் குவாலிட்டி மேனேஜராகவும் பதவிவகித்துள்ளார். 2019-ல் பணி ஓய்வுக்குப் பின் பி.பி.சி.யுடனான நேர்காணல் ஒன்றில், ‘விமான தயாரிப்பு தாமதமாவதைத் தடுக்க, நிர்வாகம் அவசரப்படுத்தும்போது தரம்குறைவான விமானப் பகுதிகளை தொழிலாளர்கள் பொருத்துவது உண்டு’ என்று தெரிவித்திருக்கிறார். ஓய்வுபெற்ற பின் கம்பெனிக்கு எதிராக ஒரு வழக்கு கூட தொடுத்திருந்தார். 2024-ல் நிறுவனத்துக்கு எதிராக சாட்சியமளித்துவிட்டு வந்த அவர், ஏனோ தன்னைத் தானே சுட்டுக்கொண்டு மரணமடைந்தார். தவிரவும் அந்த விமானத்தின் ஆக்ஸிஜன் மாஸ்க்குகளில் மிகவும் அபாயகரமான பிரச்சனைகள் இருந்ததாகவும், நான்கில் ஒரு மாஸ்க் வேலைசெய்யாமல் போகும் அபாயம் இருந்ததாகவும் தெரிவித்திருந்தார்.

பழைய போயிங் விமானங்களிலிருந்த தரக்குறைவான பகுதிகள், புதிய போயிங் விமானங்களில் பொருத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார். அதனை போயிங் நிறுவனம் மறுத்திருந்தது.

மற்றொருவரான போயிங் நிறுவன எஞ்சினியரான சாம் சலேபூர், ‘போயிங் விமானங்களில் 787 ட்ரீம்லைனர் விமானங்களை உலகளவில் பயன்படுத்துவதை நிறுத்தவேண்டும். விமானங்களை இணைக்கும்போது ஃபியூஸ்-லேஜ்

வேலையைத் தொடங்கியிருக்கிறார். பின் பத்தனம்திட்டா அரசு மருத்துவமனையில் நர்ஸாக வேலை பார்த்திருக்கிறார். பிறகு அவர் சலாலா, ஓமன் என வெளிநாடுகளுக்கு வேலை பார்க்கச் சென்றிருக்கிறார். கடந்த எட்டு மாதங்களாகத்தான் ரஞ்சிதா லண்டனில் வேலை பார்த்து வருகிறார்.

அதேசமயம், கடந்த வருடம் மாநில அரசின் சுகாதாரத் துறையில் அவருக்கு வேலை கிடைத்திருக்கிறது. கான்ட்ராக்டில் கையெழுத்திட்டிருப்பதால், லண்டன் வேலையை இடையில் விட முடியாததால், நீண்ட விடுப்பில் இருந்தபடியே வெளிநாட்டு வேலையையும் தொடர்ந்திருக்கிறார். தனது அரசு வேலையைப் புதுப்பிப்பதற்கான படிவங்களில் கையெழுத்திடுவதற்காகவே இப்போது கேரளா திரும்பியிருக்கிறார். அதில் கையெழுத்திட்டுவிட்டு சில நாட்கள் குடும்பத்துடன் செலவிட்டு, லண்டன் திரும்பவிருந்த நிலையில்தான் இந்த துயரச் சம்பவம் நடந்திருக்கிறது.

தனது செவிலியர் பணி மூலம் சம்பாதித்த பணத்தில் புது வீடு கட்டி வரும் அவர், விரைவில் தன் குழந்தைகளுடன் அதில் குடியேறவும் சொந்த நாட்டுக்குத் திரும்பி வாழ்க்கையில் செட்டிலாகவும் கனவு கண்டுகொண்டிருந்தார். அவர் கனவு கனவாகவே போய்விட்டது என்கிறார்கள் அவரது உறவினர்கள்.

## பூமி சவுகான்

குஜராத்தின் அங்கலேஷ்வர் நகரைச் சேர்ந்தவர் பூமி சவுகான். அன்றைய தினம் லண்டன் செல்வதற்காக தன் சொந்த ஊரிலிருந்து அகமதாபாத் வந்திருந்தார். அகமதாபாத்தை சரியான நேரத்துக்கு வந்தடைந்த சவுகான், ஒரு டாக்ஸியில் ஏர்போர்ட்டுக்குக் கிளம்பினார். வழியில்


ஜேமி ரே மீக், -பியோங்கல் கிரின்லா


ரஞ்சிதா கோபகுமாரன்



சாம் சலேபூர்

பாகங்களை இணைக்கும்போது இடைவெளிகளை சரிவர நிரப்பத் தவறிவிட்டதாகவும், இதனால் விமானம் அதன் ஆயுட்காலத்துக்கு முன்பே செயலிழக்கும்' எனவும் தெரிவித்திருந்தார். இதையும் போயிங் நிறுவனம் புறக்கணித்துவிட்டது.

சமீபத்திய டேரிஃப் விவகாரத்தையடுத்து அமெரிக்காவின் போயிங் விமானங்களை சீன விமான நிறுவனங்கள் வாங்கக்கூடாதென்று சீனா உத்தரவிட்டிருந்தது. நிறைய நாடுகளும் போயிங்கிலிருந்து நவீன விமானங்களுக்கு மாற ஆரம்பித்திருக்கின்றன. ஆனால் அத்தனைக்கும் பிறகும் போயிங் விமானங்கள் பறந்துகொண்டுதான் இருக்கின்றன.

விமானத்தில் நம் இஷ்டத்துக்கு எடைகளை ஏற்றிவிட முடியாது. அதைக் கண்காணிக்கவும் வரையறுக்கவும், பராமரிக்கவும் நிறுவனங்கள் உண்டு. இந்தியாவில் செலிபி எனும் நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வந்தது. அகமதாபாத் ஏர் போர்ட்டையும் இந்நிறுவனம்தான் பராமரித்து வந்தது. 2032 வரை இந் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் இருக்கிறது.

ஆனால் இது துருக்கி நிறுவனம். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சமீபத்தில் நடைபெற்ற உரசலில், துருக்கி பாகிஸ்தான் பக்கம் நின்றது. இதையடுத்து இந்நிறுவனத்தை அதன் ஒப்பந்த காலம் முடியும் முன்பே இந்தியா வெளியேற்றியது.

அதற்குப் பதில் அதானி ஏர்போர்ட் ஹோல்டிங் நிறுவனத்துக்கு அப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இந்தத் துறையில் அனுபவமில்லாத நிறுவனம் இது. எனவே சில நிபுணர்கள், அதானி ஏர்போர்ட் ஹோல்டிங் நிறுவனம் அனுபவமின்மை காரணமாக அளவுக்கு மீறி சுமையேற்றியது காரணமாக இருக்கலாம் என்று சந்தேகம் கிளப்புகிறார்கள்.

எது எப்படியோ, எதிர் காலத்தில் இத்தகைய விபத்துகளைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளில் அரசாங்கமும் விமான நிறுவனங்களும் மும்முரம் காட்டவேண்டும்.

---

போக்குவரத்து நெரிசல். போக்குவரத்து நெரிசலைத் திட்டிக்கொண்டே விமான நிலையத்தை வந்தடைந்த அவரை, அங்குள்ள அதிகாரிகள் விமானத்தில் ஏறுவதற்கான நேரம் கடந்துவிட்டது. பத்து நிமிடம் தாமதம். இனி அனுமதிக்கமுடியாது எனச் சொல்லியிருக்கிறார்கள். எத்தனையோ கெஞ்சிக்கேட்டும் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது. பணமும் போச்சு பயணமும் நடக்கவில்லை யென்று மிகுந்த மனவருத்தத்தில் இருந்தார் பூமி சவுகான் அடுத்த சில நிமிடங்களில் கடவுள்தான் தன்னைத் தாமதப்படுத்தி விபத்திலிருந்து காப்பாற்றியதாகப் ஊடகங்களில் பேசிவருகிறார்.



சுப்மோடி, சாகன் மோடி

குஷ்பு ராஜ்புரோகித்

அர்ஜுன் பட்டாலியா

## குஷ்பு ராஜ்புரோகித்

ராஜஸ்தான் மாநிலம், பலோத்ரா மாவட்டம் அரபா கிராமத்தைச் சேர்ந்தவர் குஷ்பூ ராஜ் புரோகித். இவருக்கு இந்த வருடம் ஜனவரியில் தான் திருமணம் ஆனது. இவரது கணவர் மன்பூல் சிங், லண்டனில் படித்துவரும் மாணவர். திருமணத்துக்குப் பின் கணவர் லண்டன் சென்றுவிட, தன் சொந்த வீட்டில் வசித்துவந்த குஷ்பூ, முதன்முறையாக தன் கணவர் மன்பூல் சிங்கை லண்டனில் சென்று சந்திப்பதற்காகக் கிளம்பினார். அகமதாபாத் வந்தவர், விமான நிலையம் முன்பாக கடைசியாக உறவினர்களுடன் சேர்ந்து எடுத்த புகைப்படம்தான் அவரது கடைசிப் புகைப்படம் என்பதை அறியவில்லை.

## அர்ஜுன் பட்டாலியா

சில சமயங்களில் சிலரோடு விதி விளையாடும். அப்படி ஒரு ஆட்டத்துக்கு சமீபத்தில் தேர்ந்தெடுத்த பெயர்தான் அர்ஜுன்

(தொடர்ச்சி 40-ம் பக்கம்)



# காப்பக மரணம்!

## —கவலையில் தென்காசி!

வாழ்க்கையின் அந்திம காலத்தில் குடும்பங்களால் வெளியேற்றப்படும் வயதானவர்களின் புகலிடம்தான் ஆதரவற்றோர் இல்லம். அத்தகைய ஆதரவற்றோர் காப்பகத்தில் உணவருந்தியவர்களில் 4 பேர் பலியானது அம்மாவட்டத்தை உலுக்கியிருக்கிறது.

தென்காசி அருகேயுள்ள சுந்தரபாண்டியபுரத்தில் அன்னை நல்வாழ்வு ட்ரஸ்ட் என்ற ஆதரவற்றோர் இல்லம் ஒன்று செயல்பட்டுவருகிறது. அரசு பதிவுபெற்ற இக்காப்பகத்தை செங்கோட்டையைச் சேர்ந்த ராஜேந்திரன் நடத்திவருகிறார். முழுக்க முழுக்க பொதுமக்கள், சமூகநல ஆர்வலர்கள், முக்கிய பிரமுகர்கள் போன்றோர்களிடம் நன்கொடை பெற்று நடத்தப்பட்டு வருகிற இந்த இல்லத்தில் மனநலம் குன்றியவர்கள், முதியவர்கள் என்று 59 பேர் தங்கியுள்ளனர்.

அருகிலுள்ள செங்கோட்டை, கோவில்பட்டி, கடையநல்லூர், சொக்கம்பட்டி, கீழப்புலியூர் ஆகிய இடங்களிலிருந்து புறக்கணிக்கப்பட்ட ஆதரவற்ற முதியவர்கள் இங்கு தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ஜுன் 10-ஆம் தேதி இக்காப்பகத்தில் உள்ளவர்கள் மதிய உணவு சாப்பிட்டதில் செங்கோட்டையைச் சேர்ந்த சங்கர்கணேஷ், அம்பிகா, சொக்கம்பட்டியைச் சேர்ந்த முருகம்மாள் ஆகிய மூன்று பேருக்கும் வாந்தி, மயக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதையடுத்து காப்பகத்துக்காரர்கள் அவர்களை அருகிலுள்ள தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்த்துள்ளனர். 12-ஆம் தேதி காலை கோவில்பட்டி செல்வராஜ், மதுரையைச் சேர்ந்த விஜயா, மும்தாஜ், சாந்தி, கோமதி, கடையநல்லூரைச் சேர்ந்த மீனாட்சிசுந்தரம், பேச்சியம்மாள் உள்ளிட்ட 8 பேர் அடுத்தடுத்து உடல்நலம் பாதிக்கப்பட்டு அதே அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுவந்த நிலையில் சங்கர்கணேஷ், முருகம்மாள், அம்பிகா ஆகிய 3 பேர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தனர். இதையடுத்து மாவட்ட எஸ்.பி. அரவிந்த், சுகாதாரத்துறை அதிகாரி கோவிந்தன், மாவட்ட உணவுப் பாதுகாப்பு அதிகாரி புஷ்பராஜ் ஆகியோர் சம்பவ இடமான முதியோர் இல்லத்திற்கு வந்து விசாரணை நடத்தினர். எஸ்.பி. அரவிந்த் முதியோர்களுக்கான







பலியானவர்கள்

www.nakkheeran.in

நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தினார். முதியோர் இல்லத்தில் வழங்கப்பட்ட உணவு, குடிநீர் போன்றவைகளை ஆய்வுசெய்த அதிகாரிகள் அவற்றை சோதனைக்காக எடுத்துச்சென்றுள்ளனர். மரணத்திற்கான காரணம் என்ன என்பது ஆய்வுக்குப் பின்னர்தான் தெரியவரும் என்கிறார்கள் அதிகாரிகள். மேலும், இக்காப்பகத்திலுள்ள 48 பேர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அருகிலுள்ள அரசு காப்பகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

தென்காசி மாவட்ட அரசு மருத்துவமனை தலைமை அதிகாரிகளிடம் பேசியதில், ''கடந்த 10-ஆம் தேதி இரவு சிகிச்சைக்காகச் சேர்ந்த ஒருவர் இறந்துள்ளார். அவர் தனது வீட்டு முகவரியையும் கொடுத்திருந்தார். அடுத்து 11-ஆம் தேதி அனுமதிக்கப்பட்ட மற்றொருவர் அன்று இரவே உயிரிழந்தார். இவர்கள் வெவ்வேறு வார்டுகளில் சேர்ந்துள்ளனர். புறநோயாளிப் பிரிவுகளிலும் சேர்ந்துள்ளனர். நேற்று (12.06.2025) காலையில் 3-வது நபர் இறந்த பிறகுதான் அவர்கள் காப்பகத்தில் உள்ளவர்கள் என்பது தெரியவந்தது. 47 பேர் அனுமதிக்கப்பட்டதில் 15 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவிலுள்ளனர். இதனிடையே உணவு செரிமானக் கோளாறால் பாதிக்கப்பட்ட தனலட்சுமி 13-ஆம் தேதி காலை உயிரிழந்தார். இதையடுத்து பலியானவர்களின் எண்ணிக்கை 4 ஆக உயர்ந்திருக்கிறது.



காப்பகத்துக்கு சீல்



மருத்துவமனை சிகிச்சையில் முதியோர்கள்

முதியோர் இல்ல உயிரிழப்பு குறித்து நிர்வாகத்தின்மீது முதற்கட்டமாக, பி.என்.எஸ். 194 பிரிவின்கீழ் வழக்கு பதிந்து, அதன் நிர்வாகி கைதுசெய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டதில் முதியோர் இல்ல நிர்வாகிகள், அவர்கள் சமீபத்தில் நடந்த பண்டிகையையொட்டி தானமாக கிடைத்த இறைச்சியை சமைத்து முதியோர்களுக்கு வழங்கியதாகத் தெரிவித்தனர். ஆனால் அந்த இறைச்சியைச் சாப்பிட்டவர்களும் சாப்பிடாதவர்களும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். சாப்பிட்ட உணவால் அவர்கள் இறந்தார்களா என்று இப்போதைக்கு கூறமுடியாது. அது தொடர்பான விசாரணை நடந்துவருகின்றது" என்றார் நெல்லை சரக டி.ஐ.ஜி. (பொ.) சந்தோஷ் ஹதிமானி.

இதுகுறித்து கீழப்புலியூரின் சுப்புலட்சுமி, ''27 வயதான எனது சகோதரி இசக்கியம்மாள் மனநலம் பாதிக்கப்பட்டவர். அவரை நாங்கள் இந்த காப்பகத்தில் சேர்த்திருந்தோம். இப்ப 4 பேர் இறந்த சம்பவத்தால பதறிப்போன நான் அங்க வந்து விசாரிச்சப்ப அவரை அன்பு இல்லம் என்னும் காப்பகத்தில் சேர்த்துள்ளோம் என்று போன்ல சொன்னாங்க. அது எங்கிருக்கிறது என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கிறேன்'' என்றார் வேதனையாய்.

இதனிடையே இச்சம்பவத்தின் எதிரொலியாய் உணவுத்துறை அதிகாரிகள் அக்கம்பக்க பகுதியிலுள்ள இறைச்சிக் கடைகள், தென்காசி, மேலப்பாவூர், ரயில்நிலையம் உள்ளிட்ட பல பகுதிகளில் சோதனை செய்ததில் இரசாயனம் கலந்த பால் தயாரித்து விற்பனை செய்ததாக ஒருசிலரை கைது செய்திருக்கிறார்கள். கோட்டாட்சியர் லாவண்யா முன்னிலையில் மேற்படி தனியார் காப்பகம் சீல் வைக்கப்பட்டது.

அரசு தன் பார்வையை ஆதரவற்றோர் காப்பகத்தின் பக்கமும் திருப்ப வேண்டியது அவசியமாகியிருக்கிறது.

-ப.இராம்குமார்



## ஆவேசமாக பதிலளிப்பது பலம் அல்ல பலவீனம்! சொற்களில் சக்தி பிறக்கணும்; வெற்றுச் சத்தங்களில் அல்ல!

**(37-ம் பக்க தொடர்ச்சி)**

பட்டாலியா. அர்ஜுன் லண்டனில் குடியேறிய இந்தியர். இவரது மனைவி பாரதிபென். இவர்களுக்கு 8 மற்றும் 4 வயதில் இரு பெண் குழந்தைகள்.

பாரதிபென்னுக்குத் திடீரென உடல்நலமில்லாமல் போய் இறந்தும் போனார். தனது இறப்புக்கு முன், அஸ்தியை தனது சொந்த ஊரில் கரைக்கவேண்டுமென்ற கடைசி ஆசையை வெளியிட்டிருக்கிறார். எனவே குஜராத்தின் வாடியா பகுதிக்கு வந்து நர்மதை நதியில் அஸ்தியைக் கரைத்து இறுதிச் சடங்குகளைச் செய்திருக்கிறார் அர்ஜுன். பின் லண்டனுக்குத் திரும்ப விமானம் ஏறியவர், அகமதாபாத்தையே தாண்டவில்லை. அர்ஜுன் பட்டாலியாவின் குழந்தைகள் தாயையும், தந்தையையும் இழந்து லண்டனில் நிர்க்கதியாய் நிற்கிறார்கள்.

### கலங்கவைத்த லண்டன் பயணிகள்!

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில், இரண்டு வெளிநாட்டவர்கள் விமானப் பயணத்துக்கு முன்னதாக வெளியிட்டிருந்த ரீல்ஸ் ஒன்றும் வைரலாகியிருக்கிறது.

இங்கிலாந்தை சேர்ந்த ஜேமி ரே மீக், ஃபியோங்கல் கிரின்லா மீக் இருவரும் லண்டனில் ஆன்மிக நல நிறுவனம் ஒன்றை நடத்திவருகிறார்கள். இந்தியாவில் ஆன்மிகம் சார்ந்த தேடலுக்காக 10 நாள் பயணமாக வந்தவர்கள், அகமதாபாத்திலிருந்து விமானத்தில் லண்டன் செல்வதற்கு முன்னதாக ரீல்ஸ் வெளியிட்டுள்ளனர். அதில், "நாங்கள் ஏர்போர்ட்டில் இருக்கிறோம்... விமானம் ஏறவிருக்கிறோம், குட் பை இந்தியா. இன்னும் 10 மணி நேரத்தில் இங்கிலாந்தில் இருப்போம். கோயிங் பேக், ஹேப்பிலி... ஹேப்பிலி... ஹேப்பிலி" என்று மகிழ்ச்சி ததும்ப பேசியிருந்தனர். இன்னும் சிறிது நேரத்தில் இந்த உலகிற்கே குட்பை சொல்லப்போவது தெரியாமல் வெளியிட்டிருந்த ரீல்ஸ் வீடியோ பலரையும் கலங்கடிப்பதாக இருந்தது.

### அருண்பிரசாந்த்


பூமி சவுகான்


அருண் பிரசாந்த்

விபத்தால் விமானத்தில் பயணித்தவர்களுக்கு மட்டுமல்லாமல், அது சென்று மோதிய பி.ஜே. மருத்துக் கல்லூரியின் விடுதியில் அப்போது உணவருந்திக் கொண்டிருந்தவர்களுக்கும் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் 33 பேர் உயிரிழந்துள்ளனர். பல மாணவர்கள் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்றுவருகிறார்கள். இந்நிகழ்வில் உயிர் பிழைத்த மாணவர்களில் ஒருவர் தமிழகத்தைச் சேர்ந்த அருண்பிரசாந்த்.

அவர் கூறுகையில், "விடுதியின் 5-வது மாடியில் நண்பர்களுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்போது பெரும் ஓசையுடன் கட்டடத்தின் மீது ஏதோ விழுந்தது. நாங்கள் இருந்த மாடியே புகைமூட்டமானது. என்ன நடக்கிறதென்றே புரியவில்லை. பீதியில் அங்கிருந்து முதல் தளத்துக்கு ஓடிவந்து, கீழே குதித்தேன். பிறகுதான் விமான விபத்து குறித்துத் தெரிய வந்தது" என்கிறார்.


தப்பிய ரமேஷ் விஸ்வாஸ்குமார்

### பலியான சகோதர, சகோதரி!

ராஜஸ்தான் உதய்ப்பூரை சேர்ந்த மார்பிள் வியாபாரி சஞ்சீவ் மோடி. இவரது மகன் சுப் மோடி, லண்டனில் பி.டெக். கெமிக்கல் இன்ஜினியரிங் படித்துவருகிறார். இன்னொரு மகள் சாகன் மோடி, காந்தி நகரிலுள்ள கல்லூரியில் பி.பி.ஏ. படிக்கிறார். சகோதர, சகோதரிகள் விடுமுறைக்கு லண்டனை சுற்றிப் பார்க்கத் திட்டமிட்டு, அகமதாபாத்திலிருந்து ஏர் இந்தியா விமானத்தில் பயணித்து, விபத்தில் பலியானது அவர்களின் குடும்பத்தினரிடையே பெருத்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

விபத்தில் உயிரிழந்த ஒவ்வொரு பயணிக்கும் ஒருகோடி ரூபாய் இழப்பீடு வழங்குவதாக ஏர்இந்தியா நிறுவனம் அறிவித்துள்ளது. ஆனால் குஜராத் மாநில அரசு மற்றும் ஒன்றிய அரசு இழப்பீடு அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

**-க.சுப்பிரமணியன்,**
**தெ.சு.கவுதமன்.**


ஒற்றைச் செங்களால்
எதிரிகளின் கோட்டையை தகர்த்தெறிந்த
எங்கள் துணை முதல்வர்
ஓய்வறியா
சூரியனே!
வருக ! வருக !!
Magil Desings
70103 77039
அன்புடன்....
KS.கார்த்திக்சோலை
B.Com.,LLB.,DBA,(Sweden)
தலைவர் - கோட்டையூர் பேரூராட்சி

advt

# அப்பா-மகன் சண்டை!

## பா.ம.க. நிஜ நிலவரம்!

"ஹலோ தலைவரே, பா.ம.க.வில் தந்தைக்கும், தனயனுக்கும் நடக்கும் யுத்தம், அக்கட்சியினரையே குழப்பிவருகிறது.''

"ஆமாம்பா, பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், அன்புமணிக்கு மேலும் அதிர்ச்சி தரவிருக்கிறார் என்கிறார்களே?''

"உண்மைதாங்க தலைவரே, பா.ம.க.வில் தந்தைக்கும், தனயனுக்கும் நடக்கும் அதிகாரப் போட்டியில் தினம், தினம் ட்விஸ்டுகள் தொடர்ந்துகொண்டேயிருக்கின்றன. இந்த நிலையில், ஜூலை 25 முதல் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்யத் திட்டமிட்டிருக்கிறார் ராமதாஸ். அதற்குள், கட்சிப் பதவிகளில் ஆக்கிரமித்திருக்கும் அன்புமணி ஆதரவாளர்கள் அனைவரையும் முழுமையாக நீக்கிவிட்டு, புதியவர்களை நியமிக்கும் பணியில் அவர் தீவிரம் காட்டிவருகிறார். அதனால் நியமன அறிவிப்புகள் தைலாபுரத்திலிருந்து வந்துகொண்டேயிருக்கின்றன.. கட்சியின் பொதுச்செயலாளர் வடிவேல் ராவணனை நீக்கிய ராமதாஸ், கட்சியின் புதிய பொதுச்செயலாளராக முன்னாள் மாணவரணி நிர்வாகி முரளிசங்கரை நியமித்துள்ளார். ஏற்கனவே தலைவர் பதவியிலிருந்து அன்புமணியை கீழிறக்கி, செயல் தலைவராக அவர் நியமித்தார். ஆனாலும், செயல் தலைவர் எனச் சொல்லாமல் இன்னும் தலைவர் என்றே அன்புமணி சொல்லி



வருவதாலும், மாவட்ட அளவில் கட்சியின் பொதுக்குழுவை அவர் நடத்தி வருவதாலும், மேலும் டென்சனாகியிருக்கும் ராமதாஸ், அன்புமணிக்கு பேரதிர்ச்சி தரும் வகையில், அவரது செயல் தலைவர் பதவியையும் பறிக்கத் திட்டமிட்டிருக்கிறார் என்கிறது தைலாபுரத்திலிருந்து வரும் ஒரு தகவல்."

''என்னப்பா இப்படிச் சொல்றே? அன்புமணிதான் ராமதாஸிடம் பகிரங்க மன்னிப்பு கேட்டிருக்கிறாரே?"

"ஆமாங்க தலைவரே, 15ஆம் தேதி சர்வதேச தந்தையர் தினம் உலகம் முழுவதும் கொண்டாடப் பட்டது. இந்த நாளில் திருவள்ளூர் மாவட்ட பா.ம.க. பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அன்புமணி, தைலாபுர அதிரடி முடிவை அறிந்ததால், தடாரெனத் தன் முடிவிலிருந்து இறங்கி வந்தவராய், 'இன்று தந்தையர் தினம். மருத்துவர் அய்யா உட்பட அனைத்து தந்தையர்களுக்கும் என் வாழ்த்துக்கள். அய்யா அவர்களே, இது நீங்கள் உருவாக்கிய கட்சி. 45 ஆண்டுகால உழைப்பு உங்களுடையது. இந்தியாவிலேயே மூத்த தேசியத் தலைவர் ராமதாஸ் என்று பிரதமர் மோடியே உங்களுக்குப் புகழாரம் சூட்டியுள்ளார். அதே மதிப்பும் மரியாதையும் எங்களுக்கும் இருக்கிறது. என் மீது கோபம் இருந்தால் என்னை மன்னித்து விடுங்கள். தந்தையிடம் மன்னிப்புக் கேட்பதை பாக்கியமாக கருதுகிறேன். என்ன செய்ய வேண்டும் என சொல்லுங்கள், செய்கிறேன். நீங்கள் நீண்ட ஆயுள்பெற்று 100 ஆண்டுகாலம் வாழ வேண்டும்' என்றெல்லாம் மன்னிப்புக் கேட்டிருக்கிறார். அன்புமணியிடம் தென்பட்டிருக்கும் இந்த மாற்றத்தின் பின்னணியில் பா.ஜ.க.வும் இருப்பதாகச் சொல்கிறார்கள். அன்புமணியின் மன்னிப்பு ராமதாஸை உருக்கிவிடும் என்று ஒரு தரப்பும், இதற்கெல்லாம் ராமதாஸ் மயங்கமாட்டார் என்று ஒரு தரப்பும், பா.ம.க.விலேயே பட்டிமன்றத்தை நடத்திவருகின்றன."

''அன்புமணி கரன்ஸி பலத்தாலும் ராமதாஸுடன் மோதுவதாகச் சொல்கிறார்களே?"

"தன் தந்தையோடு தொடர்ந்து மோதிவரும் அன்புமணி, இப்போது கரன்ஸி பலத்தையும் காட்ட ஆரம்பித்திருக்கிறார். அதனால், அவர் பக்கம் நிர்வாகிகள் அதிக அளவில் சாய்ந்து வருகிறார்களாம். உதாரணமாக, பா.ம.க.வின் பொதுச் செயலாளராக இருந்த வடிவேல் ராவணன், முதலில் டாக்டர் ராமதாஸ் பக்கம்தான் இருந்தார். பின்னர், கரிசனமான அழைப்பு வந்ததும் அன்புமணி பக்கம் சென்றார். பின்னர் மன ஊசலாட்டத்தோடு மறுபடியும் ராமதாஸ் பக்கமே திரும்பினார். அவரை மீண்டும் தன் பக்கம் அழைத்த அன்புமணி, கட்சிக்கு உழைத்த உங்களைப் போன்றவர்களை எல்லாம் நாங்கள் சிறப்பிக்க வேண்டும் என்றபடி, 20 லட்ச ரூபாயைக் கொடுத்து, அவரை இனோவா காரில் வலம்வர வைத்துவிட்டார். இது அரசல் புரசலாக ராமதாஸ் கவனத்துக்குப் போக... அதிர்ந்துபோன அவர், வடிவேல் ராவணன், செவன் ஸ்டார் ஓட்டலில் இருக்கிறார். அவரைக் கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு 100 ரூபாய் பரிசு என்று கிண்டலடித்தார். இப்படி நிர்வாகிகள் அன்புமணியால் ஈர்க்கப்படுகிறர்களாம். மேலும் ராமதாஸ் கையில் பணம் புழங்காதபடி, முழுவதுமாக அவரை முடக்கிவிட்டார் அன்புமணி என்கிறார்கள், விபரமறிந்தவர்கள்."

"பா.ஜ.க. மாஜி மாநில நிர்வாகி, தொடர்ந்து எடப்பாடியோடு யுத்தம் நடத்தி வருகிறாரே?"

"உண்மைதாங்க தலைவரே, '2026-ல் கூட்டணி ஆட்சி என்று சொல்லமாட்டேன். பா.ஜ.க. ஆட்சிதான் அமையும்' என்று குரல் கொடுத்து, அ.தி.மு.க. தரப்பை எரிச்சலில் தள்ளியிருக்கிறார் அந்த பா.ஜ.க. முன்னாள் மாநில நிர்வாகி. அவர் தொடர்ந்து இப்படி தங்கள் நிலைப்பாட்டுக்கு எதிராகவும், கூட்டணியை உதறும் வகையிலும் பேசி வருவதால் ஏகத்துக்கும் டென்சனான எடப்பாடி, பா.ஜ.க. நிர்வாகிகளைத் தொடர்புகொண்டு அந்த ஆள் என்ன நினைச்சுக்கிட்டு இருக்கிறார்? அவருக்கு எதுக்கு இன்னும் முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்? அவரது போக்கு கூட்டணிக்கு வேட்டுவைக்கும் அளவுக்குப் போய்க்கொண்டிருக்கிறது என்று கொந்தளித்திருக்கிறாராம். ஆனாலும் அந்த பா.ஜ.க. நிர்வாகியோ, எடப்பாடியால்தான் மீண்டும் நான் கட்சிப் பதவியைப் பெறமுடியாமல் போய்விட்டது. அவரை எப்படி மன்னிக்கமுடியும்? கூட்டணியில் அவர் ஒட்டிக் கொண்டாலும் தமிழக பா.ஜ.க.வின் ஒரு ஓட்டுகூட அ.தி.மு.க.வுக்குப் போக விடமாட்டேன் என்று பேசி வருகிறாராம். இந்த மோதல் விபரங்கள் முழுதும் டெல்லி பா.ஜ.க. தலைமைக்கு இங்கிருந்து போய்க்கொண்டு இருக்கிறதாம்."





www.nakkheeran.in

''மதுரை வந்த அமித்ஷாவிடம், தி.மு.க. ஊழலை அமலாக்கத்துறை மூலம் அம்பலப்படுத்த வேண்டும் என்று பா.ஜ.க. நிர்வாகிகள் கோரிக்கை வைத்தார்களாமே?"

''மதுரையில் பா.ஜ.க.வின் உயர்மட்ட செயற்குழுக் கூட்டத்தில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பங்கேற்றபோது. அவரிடம் கோரிக்கை வைத்த பா.ஜ.க. நிர்வாகிகள் சிலர் '2014 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வின் 2ஜி ஊழலை அம்பலப்படுத்தினோம். மிகப்பெரிய தாக்கத்தை அந்த ஊழல் எதிரொலிக்கச் செய்தது. அதேபோல, 2026 தேர்தலில் தி.மு.க.வின் ஊழல்களை நாம் பெரிய அளவில் வெளிப்படுத்த வேண்டும். அதற்கு அமலாக்கத்துறையையும் வருமானவரித்துறையையும் நாம் பயன்படுத்த வேண்டும்' என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு பதிலளித்த அமித்ஷா, தி.மு.க.வின் ஊழல்களை வெளிப்படுத்தினால் மட்டுமே ஜெயிக்கலாம் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. தி.மு.க.வின் ஊழல்களை எடுத்துச் சொல்வது ஒரு விசயம்தானே தவிர, அதுவே முக்கிய கருவியாக இருக்க முடியாது. அதனால், மக்களின் ஆதரவைப் பெறுவதில் மாற்று வியூகத்தைக் கடைப்பிடியுங்கள் என கூலாக அவர்களுக்கு அட்வைஸ் செய்தாராம்."

''அமித்ஷா வந்துசென்ற பிறகு மதுரை மண்டலமே எழுச்சியாக மாறிவிட்டது என்றும், பா.ஜ.க.வில் 5 ஆயிரம் இளைஞர்கள் சேரவிருக்கிறார்கள் என்றும் பா.ஜ.க. அறிவித்திருந்ததே?"

''மதுரையில் மாநில பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் முன்னிலையில், பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த 5 ஆயிரம் இளைஞர்கள் அக்கட்சியில் இணையவிருக்கிறார்கள் என்று அறிவித்து, அதற்காக அங்குள்ள வளையன்குளம் பகுதியில் பெரிய அளவில் கூட்டம் ஒன்றை பா.ஜ.க. தரப்பு ஏற்பாடு செய்திருந்தது. ராமநாதபுரம் சமஸ்தான இளைய வாரிசு ஆதித்ய சேதுபதி தலைமையில் அவ்வளவுபேரும் இணையவிருப்பதாக பில்டப் எல்லாம் கொடுத்திருந்தனர். ஆனால் அந்தக் கூட்டத்தில் 350 பேர் கூட கலந்துகொள்ளவில்லை. மேடைக்கு எதிரில் போடப்பட்டிருந்த நாற்காலிகள் எல்லாம் கடைசிவரை காலியாகவே இருந்தன. இந்தக் கூத்தில், மோடி, அமித்ஷா ஆகியோரின் படத்தைப் போட்டு, பெரிய, பெரிய பிளக்ஸ் போர்டுகளையும் அங்கே வைத்திருந்தனர். அவையும் திடீரென வீசிய காற்றில், நார் நாராகக் கிழிந்து தொங்கியது. இதனால் விழாவை ஏற்பாடு செய்த பா.ஜ.க. நிர்வாகிகள் நொந்துபோக, அந்த விழாவே கேலிக்கூத்தாக மாறியது."


அமித்ஷா

"அரசை எதிர்த்துப் போராடத் தயாராகி வந்த ஜாக்டோ ஜியோ அமைப்பிற்குள் சலசலப்பு தெரியுதே?"

"அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்களின் கூட்டமைப்பான ஜாக்டோ-ஜியோவில், ஒரு அங்கமாக இருக்கிறது தமிழ்நாடு உயர்நிலை -மேல்நிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம். அதன் நிறுவனர் தலைவரான மாயவன், த.வெ.க. தலைவர் விஜய்யை சந்தித்துப் பேசினார். ஜாக்டோ-ஜியோவின் கோரிக்கையான பழைய ஓய்வூதியத் திட்டம் குறித்து, விஜய்யிடம் விவரித்தவர், தங்கள் போராட்டத்திற்கு ஆதரவையும் கேட்டிருக்கிறார். இதைக்கேட்ட விஜய், 'உங்கள் கோரிக்கையை ஆதரிப்பேன். உங்கள் போராட்டத்திற்கு நேரில் வந்து ஆதரவும் தெரிவிப்பேன்' என்றாராம். இந்தத் தகவல் வெளியே கசிந்ததும் அது பெரிய அளவில் பரபரப்பானது. மாயவன் விஜய்யை சந்தித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஜாக்டோ- ஜியோ அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர்கள், 'எங்கள் கோரிக்கை குறித்து அரசிடம் பேச்சுவார்த்தை நடத்திவருகிறோம். சில கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. பழைய ஓய்வூதிய கோரிக்கை குறித்து அமைக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கை, செப்டம்பரில் வரவிருக்கிறது. அதனை எதிர்பார்த்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம். இந்த நிலையில் தனிப்பட்ட முறையில் நடக்கும் சந்திப்பிற்கும், எங்களுக்கும் சம்மந்தமில்லை' என்று தெரிவித்திருக்கிறார்கள்."

"மணல் விவகாரத்தில் பரபரப்புப் செய்தி அடிபடுகிறதேப்பா?"

"ஆமாங்க தலைவரே... கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் துறை அமைச்சராக இருந்த

www.nakkheeran.in



விஜய்யுடன் ஜாக்டோ ஜியோ அமைப்பினர்

துரைமுருகனிடம் இருந்த கனிமத்துறையை கூடுதலாக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி கவனிப்பார் என தமிழக முதல்வர் அறிவித்தார். டெண்டரை ராஜப்பாவுக்கு கொடுத்தார்கள். ராஜப்பாவிடமிருந்து சப்-காண்ட்ராக்ட் எடுப்பதற்கு கரிகாலன், எஸ்.ஆர். இருவரும், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்தின் சொந்தக்காரரான அரசு அதிகாரியான டி.டி. பெருமாள்ராஜாவை முன்னிறுத்தி காய் நகர்த்தி, பெருமாள்ராஜாவை சந்தித்தபோது... 'சப்-காண்ட்ராக்ட்டை நான் எடுத்துத் தருகிறேன், அதில் என்னையும் ஒரு பார்ட்னராக சேர்த்துக்கொள்ள வேண்டும்' என கேட்டார் பெருமாள்ராஜா. அதற்கு இருவரும் ஒத்துக்கொண்டனர். அதன்படி ராஜப்பா தம்பியான கிருஷ்ணமூர்த்தியை அணுகியுள்ளனர். இந்த பேர விஷயம் ராஜப்பாவுக்கு தெரியாது. ராஜப்பாவோ இந்தமுறை மணல் விஷயத்தில் எஸ்.ஆர். கரி, ரத்தினமோ யாரையும் உள்ளேயே சேர்க்கக்கூடாது என்பதில் கறார் காட்டுகிறாராம். எந்த ஆட்சி வந்தாலும் பினாமிகளை வைத்து எந்த குறுக்கு வழியைப் பயன்படுத்தியாவது டெண்டர் எடுப்பவர் பெருமாள்ராஜா. அடிஷனல் தகவல், தற்போது இலங்கையில் கப்பல் போர்ட் கட்டும்பணியில் இவரும் ஒரு பார்ட்னர். அதற்கும் கணிசமான ஒரு தொகையை கொடுத்துள்ளதாக தகவல்.

''கடந்த இதழில் ராங்கால் பகுதியில் வெளியான கே.ஆர். வெங்கடேஷ் விவகாரம் உரிய தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கே.''

"ஆமாங்க தலைவரே, கே.ஆர். வெங்கடேஷ் என்கிற மிளகாய்ப்பொடி வெங்கேடஷ் விவகாரம் கைதுவரை போனதுக்குப் பின்னால பெரிய கதையிருக்கு. இந்த வெங்கடேஷ், வினோஜ் பி செல்வத்துக்கு வேண்டியவர். எப்படியோ வினோஜை சரிபண்ணி சக்கரவர்த்தி மூலமா, அமித்ஷா சந்திக்கவேண்டியவர்கள் பட்டியல்ல தன் பெயரை இடம்பெற வைத்து அதை கேசவ விநாயகத்துக்கு அனுப்புறார். கேசவவிநாயகம்தான் உள்துறை அமைச்சரை சந்திக்கவேண்டியவங்க லிஸ்டை பைனல் பண்றவர். முன்னால, இந்தப் பவர் பா.ஜ.க. மாநில முன்னாள் தலைவர் கையில இருந்துச்சு. இப்போது அது நயினார் நாகேந்திரனிடம் இருக்கணும். ஆனா, இதுல அவர் அதிக ஆர்வம் காட்டுறதில்லை. அதனால் கேசவவிநாயகமே இந்தப் பணிகளைக் கவனிச்சுக்கிட்டிருக்கிறார். கேசவவிநாயகனும் ஆராயாமல் வெங்கடேஷ் பெயரைச் சேர்த்துடுறார். இதுக்குப் பின்னால சில உருட்டல்கள் இருக்கிறதா சொல்றாங்க. இது சர்ச்சையானதும் சுதாகர்ரெட்டி மூலமா அமித்ஷா கவனத்துக்குப் போகுது. அமித்ஷா ஏன் இப்படி ஆச்சுன்னு பி.எல். சந்தோஷைக் கேட்கிறார். சந்தோஷ், நயினார் நாகேந்திரனைக் கேட்க, அவரோ கேசவவிநாயகத்தைக் கைகாட்டறார். கேசவவிநாயகம் சக்கரவர்த்திமேல பாரத்தைப் போடறார். ஆகக் கடைசியா மிளகாய்ப் பொடி கட்டம்கட்டப்பட்டிருக்கார். அதேசமயம் தாமரை கட்சியில அடுத்த கட்டம் கோவர்த்தனுக்குத்தான்னும் பேச்சு அடிபடுது."


**"நானும் என் காதுக்கு வந்த ஒரு தகவலை பகிர்ந்துக்கிறேன். அ.தி.மு.க. சார்பில் ராஜ்ய சபாவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தனபாலும், இன்பதுரையும் முதலில் எடப்பாடியிடம் சென்று வாழ்த்து பெற்றார்கள். பின்னர், தனியே வேலுமணியை சந்தித்து அவரிடமும் மகிழ்வோடு வாழ்த்து பெற்றார்கள். எடப்பாடிக்கு எதிராக அ.தி.மு.க.வில் போட்டி அரசியல் நடத்திவரும் வேலுமணியோ, தன்னிடம் அவர்கள் ஆசிபெறும் புகைப்படத்தை வெளியிட்டு, இவர்கள் என் ஆட்கள் என்று கட்சியினர் மத்தியில் காட்டிக்கொண்டிருக்கிறார். இது எடப்பாடிக்கு மேலும் நெருடலை ஏற்படுத்தியிருக்கிறதாம்.''** ●

ராங்கால்





மராட்டியத்தில் மழைக்கு 8 பேர் பலி



பூவை
ஜெகன் மூர்த்தி



# கடத்தல் - துரத்தல்! தப்பி ஓடிய எம்.எல்.ஏ!

புரட்சி பாரதம் கட்சியின் தலைவர் ஜெகன்மூர்த்தியை கைது செய்வதற்காக சென்னை திருவள்ளுவர் சாலையில் அமைந்துள்ள அவரது வீட்டின் முன்பு டி.எஸ்.பி. தமிழரசி தலைமையில் 500 போலீசார் குவிக்கப்பட்டனர். பெரும் பரபரப்புக்குள்ளான இந்த சம்பவத்தின் பின்னணி சுவாரசியமானது.

திருவாலங்காடு பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுவன் கடத்தப்பட்டான். அந்தப் பையன் கலாம்பாக்கம் என்கிற கிராமத்தைச் சேர்ந்தவன். இவனை மகேஸ்வரி என்கிற முன்னாள் போலீஸ் அதிகாரி கடத்தியிருக்கிறார். கலாம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த தனுஷ் என்பவர், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த விஜயஸ்ரீ என்பவரோடு இன்ஸ்டாகிராம் மூலம் கொண்ட தொடர்பால் இருவரும் மனமாரக் காதலித்து கடந்த மாதம் திருமணம் செய்து கொண்டார்கள். விஜயஸ்ரீயின் தந்தை வனராஜா, மணிகண்டன், சரத்குமார் மற்றும் மகேஸ்வரி ஆகியோருடன் மூன்று கார்களில் தனுஷ் வீட்டுக்கு வந்து தனுஷை தேடியிருக்கிறார்கள். விஜயஸ்ரீ, தனுஷ் அங்கு இல்லாததால் தனுஷின் பதினாறு வயது தம்பியை காரில் கடத்திச் சென்றார்கள். அதை தனுஷின் தாயார் 100 எண் மூலம் காவல்துறையில் புகார் செய்ய, கடத்த வந்த கார்களில் ஒன்று தமிழ்நாடு ஆயுதப் படை ஏ.டி.ஜி.பி.யான ஜெயராம் என்பவரின் வாகனம் என கண்டுபிடிக்கப்பட்டது.

வடக்கு மண்டல ஐ.ஜி.யான அஸ்ரா கார்க் கடத்தப்பட்ட சிறுவனை மீட்க கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிட்டார். திருவள்ளூர் போலீஸ், கடத்த வந்த வண்டி எண்களுடன் களத்தில் இறங்கியது. கடத்தலில் ஈடுபட்டது ஒரு போலீஸ் அதிகாரியின் கார் என்பதால் கடத்தியவர்கள் அந்த சிறுவனை இறக்கிவிட்டு விட்டார்கள். ஆனால் அந்த சிறுவனைக் கடத்தியவர்களை போலீசார் கைது செய்தனர். அந்த டீமில் ஒரு வழக்கறிஞரும் இருந்தார். அவர்களிடம் “தேனி மாவட்டத்திலிருந்து திருவள்ளூர் மாவட்டத்திற்கு வந்து எப்படி ஆள் கடத்தலில் ஈடுபட்டீர்கள்? ஏ.டி.ஜி.பி. ஜெயராமின் கார் எப்படி கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டது எனக் கேட்டதற்கு, மகேஸ்வரிதான் அந்த காரை கொண்டுவந்தார் என்றார்கள். திருவள்ளூர் மாவட்டத்தில் கடத்தலுக்கு உதவியது பூவை ஜெகன் மூர்த்திதான் எனச் சொன்னார்கள். பூவை ஜெகன் மூர்த்தியை கைது செய்ய அஸ்ரா கார்க் உத்தரவிட்டார். அதனால் போலீஸ் டீம் ஜெகன்


புனேவில் பாலம் இடிந்து விபத்து; 2 பேர் உயிரிழப்பு



ஜெகன் மூர்த்தி வீடு முன் பதட்டம்

மூர்த்தியின் வீட்டுக்குச் சென்றது. அங்கு ஜெகன் மூர்த்தி இல்லாததால் அவரை கைது செய்யாமல் போலீஸ் படை திரும்பியது.

இந்த திருமண விவகாரம் ஏற்கனவே காவல்துறையின் கவனத்திற்கு வந்துள்ளது. விஜயஸ்ரீயும் தனுஷும் திருவாலங்காடு காவல் நிலையத்திற்குச் சென்று தங்களது திருமணத்தைப் பற்றி சொல்லிவிட்டு, விஜயஸ்ரீயின் பெற்றோர் செல்வந்தர்கள். தேனி மாவட்டத்தில் பல கோடி சொத்துள்ள அவர்கள் எங்களது திருமணத்தை உடைக்க முயற்சிப்பார்கள் என தனுஷ் புகார் செய்திருக்கிறார்.

இருவரும் மேஜர் என்பதால் சட்டப்படி இருவருக்கும் நடைபெற்ற திருமணத்தை யாரும் பிரிக்க முடியாது என சொல்லி அனுப்பி வைத்ததோடு அந்தப் பெண்ணின் பெற்றோருக்கும் தகவல் அனுப்பியுள்ளார்கள்.

அந்தத் தகவல் மூலம் தனுஷின் இருப்பிடத்தை தெரிந்துகொண்ட விஜயஸ்ரீயின் தந்தை வனராஜா, தனுஷ் வீட்டுக்கு வந்து கூலிப்படையினர் மூலம் கடத்த முயன்றார். வீட்டில் விஜயஸ்ரீ, தனுஷ் இல்லாததால் அவரது தாயார் லட்சுமியை மிரட்டினார்கள். வீட்டிலிருந்த தனுஷின் தம்பியை கடத்திச் சென்றார்கள். தனுஷின் தாய் லட்சுமி அவசர போலீசை தொடர்புகொண்டு கடத்தப்பட்ட விவரத்தைச் சொல்லிவிட்டு பின்னர் புகாரும் செய்தார். திருவள்ளூர் போலீசார் களத்தில் குதித்தனர்.

ஜெகன் மூர்த்தி வீட்டில் இல்லாததால் அவரை தேடிப் பிடிக்க தனி போலீஸ் படை அமைக்கப்பட்டது. இந்த வழக்கில் தன்னை கைது செய்யாமலிருக்க சென்னை உயர் நீதி மன்றத்தில் முன்ஜாமீன் கேட்டு ஜெகன் மூர்த்தி மனு தாக்கல் செய்தார்.

இந்த விவகாரத்தில் ஜெகன் மூர்த்திக்கு தொடர்பிருக்கிறது என போலீஸ் தரப்பும், எப்.ஐ.ஆரில் அவரது பேரே இல்லையென மூர்த்தி தரப்பும் செய்தி வெளியிட்டது. திடீர் திருப்பமாக தனுஷின் தாய், 'என் மகனை யாரும் கடத்தவில்லை' என வீடியோ பேசி வெளியிட்டார். ஒரு போலீஸ் அதிகாரியின் கார், ஆள் கடத்தலில் பயன் படுத்தப்பட்டது எப்படி என்பது காவல்துறையினரை அதிர்ச்சியடைய வைத்தது. காவல்துறையில் ஏற்கெனவே பணிபுரிந்த மகேஸ்வரி, ஏ.டி.ஜி.பி. ஜெயராமுக்கு கொடுக்கப்பட்ட அரசாங்க காரை எப்படி கடத்தலுக்கு உபயோகப்படுத்தினார். போலீஸ் வாகனம் என்பதால் குற்றச்செயலில் போலீசாரின் சோதனையிலிருந்து தப்பிக்கலாம் என அந்தக் கார் உபயோகப்படுத்தப்பட்டதா என போலீசார் விசாரித்து வருகிறார்கள்.


ஏ.டி.ஜி.பி. ஜெயராம்

இதில் ஒரு போலீஸ் உயரதிகாரி, ஒரு எம்.எல்.ஏ., வழக்கறிஞர்கள், அடியாள் படை என சினிமா காட்சிகளை மிஞ்சும் அளவில் குற்றம் நடைபெற்றுள்ளதைப் பார்த்து காவல்துறையே அதிர்ந்து போயுள்ளது. இது அ.தி.மு.க.வின் கூட்டணியைச் சேர்ந்த ஒரு தலித் எம்.எல்.ஏ.வை குறிவைத்து நடைபெறும் அரசியல் பழி வாங்குதல் என எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி அறிக்கை வெளியிட்டுள்ளார். வழக்கை கவனமாகக் கையாளுமாறு முதல்வர் அலுவலகம் உத்தரவிட்டுள்ளது என்கிறார்கள் தலைமைச் செயலக வட்டாரங்கள். இந்நிலையில் ஜூன் 16, திங்களன்று மாலையில் பூவை ஜெகன் மூர்த்தி, ஏ.டி.ஜி.பி. ஜெயராம் இருவரும் ஆஜராகும்படி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**-தாமோதரன் பிரகாஷ்**



PUBLISHED BY **NAKKHEERAN GOPAL** ON BEHALF OF NAKKHEERAN PUBLICATIONS, 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14, AND PRINTED BY HIM AT NAKKHEERAN PRINTERS AND BINDERS 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14. EDITOR : **NAKKHEERAN GOPAL**,

Posted at Egmore RMS, Patrika Channel, Chennai-08, NAKKHEERAN TAMIL BI-WEEKLY, RNI No.: 49456/88, REGD No.TN/CH/(C)/573/2023-2025
Licensed to Post without Prepayment No.:TN/PMG(CCR) WPP-649/2023-2025 Date of Publication on posting : Every Tuesday & Friday






*advt*